வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு

Eelanadu ஈழநாடு



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390. ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 01.08.2025 வெள்ளிக்கிழமை | இதழ் : 213 | பக்கங்கள் : 12

## தமிழின அழிப்பு - ஈஸ்டர் தாக்குதல்:
# சூத்திரதாரிகளை தண்டிப்பதாலேயே பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்கும்!

**சிறீநேசன் எம். பி. தெரிவிப்பு**

மட்டக்களப்பு, ஒகஸ்ட் 01

**தமிழ் மக்கள் மீதான மனிதக் கடத்தல் காணாமல் ஆக்குதல், படுகொலைகள், வதைகள், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் போன்ற பெரும் குற்றங்களுக்கு கால்கோளிட்ட சூத்திரதாரிகள் வெளிச்சப்படுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும். அம்புகள், வேட்டையாடிகளை மாத்திரம் தண்டிப்பதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியோ, பரிகாரமோ கிடைக்காது - இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறீநேசன் தெரிவித்துள்ளார்.**

நேற்று வியாழக்கிழமை அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் இறுதி யுத்தம் 2005இல் இருந்து 2009 வரை தீவிரமாக நடைபெற்றது. இதன்போது மனித கடத்தல், சித்திர வதைகள், காணாமல் ஆக்குதல் என்பன சர்வ சாதாரணமாக நடைபெற்றன. பல்லாயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டனர் - கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டனர். இதற்கு கருவிகளாகச் செயல்பட்டனர் என்று கூறப்படுவோர் இந்த ஆட்சியில் கைதாகி வருகின்றனர். ஆனால், இவற்றுக்கு கர்த்தாக்களாக இருந்த இயக்குநர்கள் இன்னும் சுதந்திரமாகச் செயல்படுகின்றனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விடயத்திலும் அம்புகள் அகப்படுகின்றனர். 11



கைதான பிள்ளையான் குழு உறுப்பினரின் சாட்சியப்படி

## திருக்கோவிலில் மயானம் நேற்று தோண்டப்பட்டது!

- பாறூக் ஷிகான் -

கல்முனை, ஓக. 01

கடத்தப்பட்டவர்களில் ஒருவர் கொல்லப்பட்டு, திருக்கோவில் பொது மயானத்தில் புதைக்கப்பட்டார் என்று பிள்ளையான் குழுவை சேர்ந்தவர் ஒருவர் வழங்கிய வாக்குமூலத்துக்கு அமைய நேற்றைய தினம் அந்த மயானத்தில் சோதனை நடைபெற்றது. 11

## பரந்தன் விபத்தில் யுவதி உயிரிழப்பு!

கிளிநொச்சி, ஓக. 01

முன்னால் சென்ற மோட்டார் சைக்கிளை டிப்பர் வாகனம் மோதித் தள்ளியதில் இளம் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

கிளிநொச்சி - பரந்தனில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் உமையாள்புரம் - கால் ஏக்கர் திட்டத்தை சேர்ந்த சந்திரசேகரம் யதுகிரி (வயது 28) என்ற பெண்ணே உயிரிழந்தார்.

தனது வேலைத்தளம் அமைந்துள்ள கிளிநொச்சி நகரம் நோக்கி மோட்டார் சைக்கிளில் பெண் சென்று கொண்டிருந்தார். அப்போது, அவரை 11


## வெப்ப காலநிலையால் நோய்கள் ஏற்பட வாய்ப்பு

மருத்துவ நிபுணர் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 01

"வடக்கு மாகாணம் உட்பட நாட்டில் நிலவும் வெப்பமான காலநிலையால் நீர்ச்சத்து குறைபாடு, தோல் நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது", என்று சிறுவர் நோய் விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா எச்சரித்துள்ளார்.

இதனைத் தடுக்க பொதுமக்கள் போதுமானளவு தண்ணீர், இயற்கையான நீர் ஆகாரங்களை உட் கொள்ள வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். 11



அரியாலை மனித புதைகுழி:

## நேற்றும் 3 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன!

- பு.கஜிந்தன், த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஓக. 01

அரியாலை மனிதப் புதைகுழிகளில் இருந்து நேற்றும் புதிதாக 3 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன. அத்துடன், 3 எலும்புக்கூடுகள் புதைகுழிகளிலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்டன.

அரியாலை - சித்துப்பாத்தி - இந்து மயானத்தில் இரு இடங்களில் மனிதப் புதைகுழிகள் அகழப்படுகின்றன. இரண்டாம் கட்டமாக முன்னெடுக்கப்படும் அகழ்வில் நேற்று 26ஆவது நாளாகவும் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

நேற்றைய தினம் புதிதாக 3 எலும்புக்கூடுகள் 11

## வடமராட்சி கிழக்கில் 108 கிலோ கஞ்சா மீட்பு

வடமராட்சி, ஓக. 01

வடமராட்சி கிழக்கு - வத்திராயனில் சுமார் 21 இலட்சம் ரூபாய் பெறுமதியான 108 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது.

இராணுவ புலனாய்வு பிரிவு, நெல்லியடி விசேட அதிரடிப் படையினர் இணைந்து நடத்திய சுற்றிவளைப்பிலேயே இந்த கஞ்சா கைப்பற்றப்பட்டது.

மைதானம் ஒன்றின் அருகே 54 பொதிகளாக மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த கஞ்சா கைப்பற்றப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகையை நீக்க வர்த்தமானி

கொழும்பு, ஓக. 01

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் அனுபவித்து வரும் சிறப்பு சலுகைகளை இரத்து செய்வதற்காக 1986 ஆம் ஆண்டின் 4 ஆம் எண் ஜனாதிபதி உரிமைச் சட்டத்தை இரத்து செய்வதற்கான தொடர்புடைய சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

நீதி, தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சரின் 11

## அரியாலை மனித புதைகுழி; ஞாயிறு ஸ்கான் பரிசோதனை

- பு. கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஓக. 01

அரியாலை மனிதப் புதைகுழி பகுதிகளை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஸ்கான் பரிசோதனையை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று சட்டத்தரணி நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

அரியாலை - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் இரு மனிதப் புதைகுழிகளில் தற்போது அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த நிலையில், அந்தப் பகுதிகளை ஸ்கான் செய்து பரிசோதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. 11

## வடக்கு கண்ணிவெடி அகற்றல் 4.5 இலட்சம் டொலர் நிதியுதவி!

ஜப்பான் அரசாங்கம் வழங்கியது

கொழும்பு, ஓக. 01

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு ஆதரவளிப்பதற்காக 4 இலட்சத்து 50 ஆயிரம் டொலர் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 13 கோடியே 14 இலட்சம் ரூபாயை ஜப்பான் அரசாங்கம் வழங்கியுள்ளது.

இந்த நிதியுதவியை வழங்குவதற்காக டெல்வோன் சமூக நல்லிணக்கத்துக்கான உதவி (டாஸ்) நிறுவனத்துடனான ஒப்பந்தத்தில் ஜப்பான் தூதர் 11

## முதலீட்டுக்கேற்ற சூழல் இலங்கையில் உள்ளது!

மாலைதீவில் ஜனாதிபதி அநுர

கொழும்பு, ஓக. 01

தற்போது இலங்கையில் முதலீட்டுக்கு உகந்த சூழல் உருவாக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

மாலைதீவில் வர்த்தக மன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றியபோதே ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

மேலும், "2022 பொருளாதார நெருக்கடிக்குப் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாலை புதைகுழி அகழ்வு; சர்வதேச கண்காணிப்பு தேவை

## கரவெட்டி பிரதேச சபை தீர்மானம்

வடமராட்சி, ஓக. 01

அரியாலை - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழிக்கு சர்வதேச நீதி வேண்டும், அகழ்வு பணிகளை ஐ. நா. மனித உரிமைகள் பேரவை நிபுணர்கள் மேற்பார்வையிட வேண்டும் என்று வலியுறுத்தி வடமராட்சி தெற்கு மேற்கு (கரவெட்டி) பிரதேச சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அத்துடன், செம்மணியில் நடத்தப்பட்ட போராட்டத்தின்போது முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளும் தீர்மானங்களாக சபையில் நிறைவேற்றப்பட்டன.

நேற்றைய தினம் நடந்த சபையின் அமர்விலேயே இந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலும், எள்ளங்குளம் மயானத்தின் 1.220 ஏக்கர் காணியை இராணுவம் ஆக்கிரமித்துள்ளது. அங்கிருந்து இராணுவம் விலக வேண்டும். அந்தக் காணி பொது மக்களின் பயன்பாட்டுக்கு கையளிக்கப்பட வேண்டும். அத்துடன், மயானத்தின் அருகே 9 உரிமையாளர்களுக்கு சொந்தமான 2.03 ஏக்கர் காணியிலிருந்தும் இராணுவம் வெளியேறி அந்தக் காணிகளை உரிமையாளர்களிடம் வழங்க வேண்டும்.

மறைந்த யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர் அழகையா துரைராசாவின் நினைவாக உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் அவரின் சிலை அமைப்பதற்காக சபை சிபாரிசு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வீதிகளில் கழிவுகளை வீசுபவர்களை இனங்கண்டால் அவர்களிடம் இருந்து அதற்கான கழிவகற்றல் செலவீனத்தை அறவீடு செய்வதென்றும் அதற்கு அவர்கள் உடன்படாதவிடத்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக தவிசாளர் கு. சுரேந்திரன் தெரிவித்துள்ளார். (ஐ-02)

# வவுனியா பொலிஸ் நிலைய ஆதனத்தை விடுவியுங்கள்!

## மாநகர சபை ஜனாதிபதிக்கு கடிதம்

வவுனியா, ஓக. 01

வவுனியா தலைமை பொலிஸ் நிலையம் அமைந்துள்ள முழு ஆதனத்தையும் விடுவிக்குமாறு ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக வவுனியா மாநகர சபையின் முதல்வர் சு. காண்டீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாநகர சபையின் மாதாந்த அமர்வு முதல்வர் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போது கடந்த அமர்வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் முதல்வரால் தெளிவுறுத்தப்பட்டது.

இதற்கமைய, வவுனியா பொலிஸ் நிலையம் அமைந்துள்ள முழு ஆதனத்தையும் விடுவித்து, அதனை மாநகர சபைக்கு வழங்குமாறு ஜனாதிபதி, பிரதமர், பொலிஸ்மா அதிபரிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

# "மனிதாபிமான ரீதியில் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள்"

யாழ்ப்பாணம், ஓக. 01

"தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை மனிதாபிமான ரீதியில் முன்னெடுக்கவேண்டும்", என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவிடம் அரசியல் கைதிகளின் உறவினர்களும் குரலற்றவர்களின் குரல் அமைப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள நீதி அமைச்சின் பணிமனையில் நீதி அமைச்சரை நேரில் சந்தித்து இந்தக் கோரிக்கையை அவர்கள் விடுத்தனர்.

மேலும், 15 முதல் 30 வருடங்களாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் குடும்ப உறுப்பினர்கள், தங்கள் உறவினர்களின் நீண்டகால சிறைவாசம் காரணமாக தாங்கள் எதிர்கொண்ட உளவியல், சமூக மற்றும் பொருளாதார சவால்களை கண்ணீருடன் எடுத்துரைத்தனர். தங்களின் அன்புக்குரியவர்களை விரைவாக விடுதலை செய்யுமாறு அமைச்சரிடம் கூட்டாக கோரிக்கை விடுத்தனர்.

இன முரண்பாடுகளால் உருவான போரின் விளைவுகளான தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில், மனிதாபிமான அடிப்படையில் தீர்வு காண்பது அவசியமாகும். கடந்த காலத்தில், இலங்கை - இந்திய ஒப்பந்தம்,



விடுதலைப் புலிகளுடனான சமாதான பேச்சுகள், ஜே. வி. பியினருக்கான பொது மன்னிப்பு, போருக்கு பின்னர் 12 ஆயிரம் விடுதலைப் புலிகள் விடுவிக்கப்பட்டமை போன்ற சம்பவங்களையும் இதன்போது அவர்கள் நீதி அமைச்சருக்கு சுட்டிக்காட்டினர்.

இந்த வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு, பல வருடங்களாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை மனிதாபிமான ரீதியில் முன்னெடுக்குமாறு நீதி அமைச்சரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார "இந்தக் கோரிக்கைகளை காதுகளால் கேட்கவில்லை, இதயத்தால் கேட்கிறேன்" என்று குறிப்பிட்டு சட்ட கட்டமைப்புக்குள் இருந்து இந்த பிரச்னையை தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். (ஐ-05)

## சோலை வரி விவகாரத்தால்

# அமைதியை இழந்தது வவுனியா மாநகர சபை

வவுனியா, ஓக. 01

வவுனியா மாநகர சபையில் சோலை வரி தொடர்பில் அமைதியின்மை ஏற்பட்டது. இதன்போது, ஆளும், எதிர்கட்சி உறுப்பினர்கள் கடுமையாக முரண்பட்டனர்.

வவுனியா மாநகர சபையின் அமர்வு முதல்வர் சு.காண்டீபன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது, கடந்த அமர்வில் சோலை வரி தொடர்பில் குடியிருப்புகளுக்கு 8 வீதமாகவும், வர்த்தக நிலையங்களுக்கு 10 வீதமாகவும் வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த விடயம் ஆளுநரின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது என்று முதல்வர் கூறினார்.

இதன்போது, சோலை வரி அறவீடு தொடர்பாக சரியான தகவல்கள் தமக்கு முன்னர் வழங்கப்பட்டிருக்கவில்லை. சபை முதல்வர் தவறான தகவல்களை வழங்கியே தீர்மானத்தை நிறைவேற்றினார். குடியிருப்பு வரியை 5 வீதமாக குறைக்க வேண்டும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

முதல்வர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன், நிறைவேற்றப்பட்ட தீர்மானமே சரியானது. சபைக்கு வருமானம் வேண்டும் என்று கூறினார். முதல்வரின் கருத்துக்கு சில உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து சுமார் ஒரு மணி நேரம் சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

இறுதியில் எதிர்க்கட்சியினர் முன்வைத்த கோரிக்கையை எழுத்துமூலம் தருமாறு முதல்வர் அறிவித்தார். இதையடுத்து, 10 எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கையொப்பமிட்டு கடிதம் ஒன்றை வழங்கினர்.

இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்படும் என்று முதல்வர் தெரிவித்தார். (ஐ)

# புலிகளின் ஆயுதம் தேடிய அகழ்வு பணி நிறுத்தம்!

கிளிநொச்சி, ஓக. 01

விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் இருக்கலாம் என்று சந்தேகித்து மேற்கொள்ளப்பட்ட அகழ்வு பணி எவ்வித தடயங்களும் காணப்படாத நிலையில் இடைநிறுத்தப்பட்டது.

கிளிநொச்சி - தருமபுரம் - புன்னைநீராவியில் ஏ-35 பிரதான வீதி அருகே தனியார் காணி ஒன்றில் விடுதலைப் புலிகளின் ஆயுதம் இருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. இதன் அடிப்படையில், கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிவான் இஸ்மாத் ஜெமீல் முன்னிலையில் அகழ்வுப்பணி முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது எந்தவித தடயங்களும் கிடைக்காத நிலையில் அகழ்வு பணி இடைநிறுத்தப்பட்டது. (ஐ-05)

# கலாரசனா சங்கமம் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 01

புலம்பெயர் நாடுகளிலும் தாய் நாட்டிலும் புதிய தலைமுறையின் கலை ஆளுமை சங்கமிக்கும் கலாரசனா சங்கமம் கோடை நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இசையரங்கு நிகழ்ச்சியில் குரலிசை மதுஷிகன் ஜெகதீஸ்வரன் அணி செய் கலைஞர்களாக மிருதங்கம் ஞானவேல் வசந்த், வயலின் இராசரத்தினம் நிரோசன், கெஞ்சிரா விமலசிங்கம் ராகவன் வழங்குவர்.

நடன அரங்கு நிகழ்ச்சியில் ஆதித்யா ஜெயபாலனின் நெறியாள்கையில் "நர்த்தன மாலை" அணி செய் கலைஞர்களாக குரலிசை அழகேசன் அமிர்தசிந்துஜன், சிவராயமனோகரன் திலக்ஷன், மிருதங்கம் மகேந்திரா லோலேந்திரன், வயலின் இராசரத்தினம் நிரோசன், புல்லாங்குழல் சிவஞானசுந்தரம் பூட், இசைப்பலகை மதியுகநாதன் மனுசங்கர் பங்கேற்பர். (ஐ)

# குடும்ப பெண்ணை 3 நாட்களாக காணவில்லை என முறைப்பாடு!

யாழ்ப்பாணம், ஓக. 01

மூன்று நாட்களாக பெண் ஒருவரை காணவில்லை என்று மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு, நாகர்கோவிலை சேர்ந்த 25 வயதான டினுசன் நிஸ்ரலா என்ற பெண்ணே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

இவர், கடந்த 29ஆம் திகதி இரவு 11 மணியளவில் கணவனுடன் வீட்டிலிருந்த நிலையில் பெண் காணாமல் போயிருந்தார். இது தொடர்பில், மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-05)

# நல்லூர் ஆலய சூழலில்...!

யாழ்ப்பாணம், ஓக. 01

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழாவை முன்னிட்டு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தெய்வீகக் கலை அர்ச்சனை நிகழ்வை நடத்தி வருகிறது.

திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை இணுவையூர் ஞான ஏந்தல் மா. ந. பரமேஸ்வரன் பஜனை குழுவினரின் பஜனை நிகழ்வும் திருமதி ஹங்கானந்தி விஜயனின் பண்ணிசை நிகழ்வும் நடைபெறவுள்ளது.

# 15 இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு!

மன்னார், ஓக. 01

மன்னார் கடற்பரப்பில் கைதான 15 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் கடந்த ஜூன் 29, ஜூலை 01ஆம் திகதிகளில் இரு படகுகளுடன் 15 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்ட இவர்கள் நேற்றைய தினம் மன்னார் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இதன்போதே, அவர்களை எதிர்வரும் 14 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் லதீப் முகமட் அஹமட் உத்தரவிட்டார். (ஐ-07)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
01.08.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், ஆடி 16

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ஒரு தந்தையின் கனவு

காணமாலாக்கப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களுக்கு அநுர அரசாங்கத்தில் நீதி கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக காணாமலாக்கப்பட்ட லலித் என்பவரின் தந்தை தெரிவித்திருக்கிறார். அவரின் எதிர்பார்ப்பு நிறைவேறினால் ஆயிரக்கணக்கானவர்களின் நீதி உறுதிப்படுத்தப்படும். ஆனால், அது அநுர அரசாங்கத்தில் இடம் பெறுமா என்பதுதான் கேள்வி.

இதற்கு முன்னிருந்த ஆட்சியாளர்களுக்கும் அநுர அரசாங்கத்துக்கும் இடையில் சில அடிப்படையான வேறுபாடுகள் இருக்கின்றன என்பது உண்மைதான். அதாவது, அநுர அரசாங்கத்தில் இருப்பவர்கள் இறுதி யுத்தத்தோடு நேரடியாகத் தொடர்புபட்டிருக்கவில்லை - அவர்கள் யுத்தத்துக்கு ஆட்சேர்ப்பு செய்தார்கள் என்பதெல்லாம் தேர்தல் மேடைப் பிரசாரங்களுக்குரியதே தவிர, அது கவனத்தில் கொள்ளத்தக்க விடயமல்ல.

அநுர குமார மட்டுமல்ல, தென்னிலங்கையில் பழக்கடை வைத்திருக்கும் ஒரு சிங்களவரிலிருந்து ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் சிங்கள பெண்கள் வரையில் யுத்தத்தில் 'கொட்டி'களை தோற்கடிக்க வேண்டும் என்றுதான் சிந்தித்தனர். மறுபுறமாக அனைத்துத் தமிழ் மக்களும் (விடுதலைப் புலிகளால் நேரடியாக பாதிக்கப்பட்டவர்கள் ஒருவேளை மாறுபட்டிருக்கலாம்) அனைவருமே இராணுவத்தின் தோல்வியை விரும்பினர். இராணுவம் கொல்லப்படும்போது சீனவெடி மனோபாவத்தில்தான் அனைத்துத் தமிழர்களும் இருந்தனர். இரண்டு பக்கத்திலும் தங்களுடையவர்கள் வெல்ல வேண்டும் என்பதே பேராசையாக இருந்தது. இதற்கு அநுர குமார மட்டும் எப்படி விதிவிலக்காக இருந்திருக்க முடியும்?

ஆனால், இப்போது அவர் ஓர் அரச தலைவர். விருப்புவெறுப்புகளுக்கு அப்பால் அவரிடமிருந்து நீதியை மட்டுமல்ல, பாதிக்கப்பட்டவர்களுக்கான நஷ்டஈட்டையும் ஒருவர் எதிர்பார்ப்பதில் எந்தவொரு தவறுமில்லை. எனவே, லலித்தின் தந்தை போன்றுதான் ஆயிரக்கணக்கான தந்தைகளும் தாய்களும் தங்களின் பிள்ளைகளுக்கு என்ன நடந்தது, தங்களின் உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறியும் ஆர்வம் கொண்டிருக்கின்றனர். அது முற்றிலும் நியாயமானது. அந்த நியாயமான தவிப்புக்கு அரசாங்கம் பதிலளிக்கத்தான் வேண்டும்.

அநுர குமார தலைமையிலான ஆட்சிக்கு இன்னொரு முக்கியத்துவமும் உண்டு. அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக ஆயுதமேந்திப் போராடிய ஓர் அமைப்பு வரலாற்றில் முதன்முறையாக இலங்கையின் ஆட்சியை கைப்பற்றியிருக்கிறது. எந்த இராணுவத்தின் கரங்களால் தங்களின் ஆயிரக்கணக்கான தோழர்கள் வீழ்த்தப்பட்டார்களோ அந்த இராணுவ கட்டமைப்புக்கு இப்போது அநுர குமார தலைமை தாங்குகிறார். பல்லாயிரக்கணக்கானவர்களை பலி கொடுத்து அரசியல் இயக்கமொன்றை பாதுகாத்தவர்களுக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வலியைப் புரிந்து கொள்வதற்கு வேறு எவரும் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை.

எனவே, ஆட்சியாளர்கள் தாங்கள் மற்றவர்களிலிருந்து வேறுபட்டவர்கள் என்பது உண்மையானால் தீராச் சுமையுடன் இருக்கும் பாதிக்கப்பட்ட மக்களின் சுமையை இறக்கி வைப்பதற்கு முயற்சிக்க வேண்டும். நீதியை அரசாங்கத்தால் அதியுச்ச அளவில் வழங்க முடியுமென்று நம்புவது கடினம்தான். ஆகக்குறைந்தது அவர்களுக்கு என்ன நடந்து என்பதையாவது அவர்கள் அறிந்து கொள்வதற்கான வாய்ப்புகளை வழங்க வேண்டும்.

## வடக்கு ரயில் பாதை புதுப்பித்தலுக்கு எதிரான வழக்கில் செப். 18இல் தீர்ப்பு!

*கொழும்பு, ஒக. 01*

வடக்கு ரயில் பாதை புதுப்பித்தலின்போது மஹவை - அநுராதபுரம் இடையேயான ரயில் நிலையங்களுக்குள் மாற்றுத் திறனாளிகள் செல்வதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்று கூறி அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்புக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த வழக்கின் தீர்ப்பை செப்ரெம்பர் 18 ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று அநுராதபுரம் மேல் நீதிமன்ற நீதிபதி நளிந்த ஹேவாவசம் உத்தர விட்டுள்ளார்.

மாற்றுத்திறனாளி பெண்கள் சங்கத்தால் தாக்கல் செய்யப்பட்ட தொடர்புடைய வழக்கில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, அமைச் சின் செயலாளர், வடக்கு மாகாணம், அநுராதபுரத்துக்கு பொறுப்பான பொறியியலாளர்கள் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்திய கடன் உதவியின் கீழ் வடக்கு ரயில்வேயின் நவீனமயமாக்கலின் போது, மஹவை, அநுராதபுரம் இடையேயான ரயில் நிலையங்களை மேம்படுத்துவதில் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று கூறி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஐ)

## தோட்ட தொழிலாளரின் நாளாந்த ஊதியம் ரூ. 2,000

### மக்கள் போராட்ட இயக்கம் வலியுறுத்து

*ஹற்றன், ஒக. 01*

மலையக பெருந்தோட்டத் தொழிலாளரின் நாளாந்த அடிப்படை சம்பளமாக 2 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட வேண்டும் என மக்கள் போராட்ட இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பான பல கோரிக்கைகளை உள்ளடக்கிய துண்டு பிரசுரங்களை அந்த அமைப்பினர் நேற்று ஹற்றனில் விநியோகித்தனர்.

தோட்டத் தொழிலாளர் மத்திய நிலையம், சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பு , மக்கள் போராட்ட இயக்கம் என்பன இணைந்து இந்த நடவடிக்கையை முன்னெடுத்திருந்தன.

தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக 2 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட வேண்டும், மாத சம்பள முறைமை அறிமுகப்படுத்தப்பட வேண்டும், தோட்ட அடிமை முறைமை நீக்கப்பட வேண்டும், காணி உரிமை வழங்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகள் அந்தத் துண்டுப்பிரசுரத்தில் இடம்பெற்றிருந்தன. (ஐ)

## ரோஹிதவின் மகளுக்கு பிணை

*கொழும்பு, ஒக. 01*

பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தனவின் மகள் பிணையில் செல்வதற்கு மத்துகம நீதிவான் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட வாகன உதிரிப்பாகங்கள் மூலம் பொருத்தப்பட்ட வாகனம் ஒன்றை வைத்திருந்தமை தொடர்பில் அவரை வலானை குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்தனர்.

இதைத் தொடர்ந்து அவர் நேற்று மத்துகம நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சொற்பொழிவு

*யாழ்ப்பாணம், ஒக. 01*

புளியங்கூடல் கதிர்காம கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் அலங்கார உற்சவத்தின் சிறப்பு சொற்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை வரை தினமும் மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவநெறிப்பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த சொற்பொழிவு ஆலய பிரதம குருக்கள் சிவசிறீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

சிறப்புச் சொற்பொழிவை சைவப்புலவர்கள் கந்த. சத்தியதாசன், செ. த. குமரன், ச. முகுந்தன், க. கைலநாதன், இளம்சைவப்புலவர்கள் ச. நவநீதன், க. கயிலைவாசன், நித்திய பாபுதரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

## இலஞ்சம், ஊழல் குற்றச்சாட்டில் 34 அதிகாரிகள் கைதாகினர்!

*கொழும்பு, ஒக. 01*


நடப்பு ஆண்டில் 6 மாதங்களில் இலஞ்ச குற்றச்சாட்டுகள் தொடர்பில் 34 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இலஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி 01ஆம் திகதியிலிருந்து ஜூன் 30ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் இலஞ்ச குற்றச்சாட்டுகள் தொடர்பில் 3 ஆயிரத்து 22 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கைதான 34 பேரில் 10 பொலிஸ் அதிகாரிகளும் 6 சிவில் அலுவலர்களும் நீதி அமைச்சில் கடமையாற்றும் 5 அதிகாரிகளும் சுகாதார அமைச்சில் கடமையாற்றும் 2 அதிகாரிகளும் இலங்கை போக்குவரத்து சபையில் கடமையாற்றும் 2 அதிகாரிகளும் அடங்குவர் என்று இலஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேநேரம், 60 பேருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளதாக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒகஸ்ட் - 01 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம் - ஆடி 17
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : அட்டமி




**மேடம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். ஆடை ஆபரணம் சேரும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**இடபம்**
அரசால் அனுகூலம் உண்டு. மற்றவர்களால் பயனடைவீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். திடீர் யோகம் கிட்டும்.

**மிதுனம்**
உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். நட்பால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும்.

**கடகம்**
திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**சிம்மம்**
உடன்பிறந்தவர்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். அரசால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**கன்னி**
குடும்பத்தில் இருந்து வந்த பிரச்னைகள் விலகும். மன உளைச்சல் நீங்கி எதிலும் தெளிவு பிறக்கும். உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நாள்.

**விருட்சிகம்**
எதிர்காலம் பற்றிய வீண் டென்ஷன் வந்து செல்லும். முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியம் வேண்டாம். சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். கவனம் தேவைப்படும்.

**தனுசு**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

**மகரம்**
உறவினர்கள், நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. சாதித்துக் காட்டும் நாள்.

**கும்பம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் பழைய சிக்கல்கள் தீரும். புத்துணர்ச்சி பெருகும்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும்.

# யாழில் பால்நிலைசார் வன்முறைக்கு எதிரான செயல்பாட்டுக் குழு கூட்டம்

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 01

பால்நிலைசார் வன்முறைக்கு எதிரான செயல்பாட்டுக்குழுக் கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பால்நிலைசார் வன்முறைக்கு எதிரான செயல்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டன. குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்படும் போது - கடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் பிரதேச செயலக ரீதியில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளனவா? என்பதனை சகல தரப்பினரும் உறுதிப்படுத்த வேண்டும் என அரசாங்க அதிபரால் தெரிவிக்கப்பட்டது.



மேலும், அரச சார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப் பட்டுவரும் பங்களிப்புக்கள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்க அதிபரால் ஆராயப்பட்டு, பிரதேச செயலகங்களுடன் இணைந்த வகையில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

மேலும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இவ்வாண்டு தை மாதம் முதல் ஆனி மாதம் வரை 580 பால் நிலைசார் வன்முறைகள் பதிவு செய்யப்பட்டுள்ளதற்கு அமைவாக, அவை தொடர்பில் இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைஅரசாங்க அதிபர் ஆராய்ந்ததுடன், பிரதேச செயலக ரீதியாக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் சமூக மட்டத்திலும் பாடசாலைகளிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் விழிப்புணர்வு செயல்திட்டங்களையும் கேட்டறிந்து உரிய வழிகாட்டுதல்களை வழங்கினார்.

(எ)

# வவுனியா கூமாங்குளத்தில் வன்முறை கைதான 7 பேரின் விளக்கமறியல் நீடிப்பு

வவுனியா, ஒகஸ்ட் 01

வவுனியா - கூமாங்குளம் பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 7 பேரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு வவுனியா, கூமாங்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் ஒருவர் வீதியில் விழுந்து மரணமடைந்தார். இதன்போது அப்பகுதியில் பயணித்த போக்குவரத்து பொலிஸாரே குறித்த மரணத்துக்கு காரணம் எனத் தெரிவித்த ஒரு குழுவினர் குழப்பத்தில் ஈடுபட்டதுடன், பொலிஸார் மீதும் தாக்குதல் மேற்கொண்டனர்.

மரணம் தொடர்பில் விசாரணை செய்ய சென்ற பொலிஸார் மீது அப்பகுதியில் குழுமி இருந்தவர்கள் தாக்குதல் நடத்தியதாகவும் அதில் 5 பொலிஸார் காயமடைந்ததுடன் பொலிஸாரின் இரு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் கப் ரக வாகனம் ஒன்றும் சேதமாக்கப்பட்டன.

இந்த நிலையில், அரச சொத்துக்களை சேதப்படுத்தியமை, மக்களை ஒன்று கூட்டியமை, பொலிஸாரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியமை, இறப்புக்கு காரணமாக இருந்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் இருவர் கடந்த 14 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளையடுத்து மேலும் 5 பேர் கடந்த 18 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது 7 பேரையும் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(எ-10)

# யாழ்.மாவட்ட செயலக ஒருங்கிணைப்பில் கொத்தணி இரத்ததான முகாம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 01

மாவட்ட செயலகத்தின் ஒருங்கிணைப்பில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இரத்த வங்கிப்பிரிவுடன் இணைந்து - ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியாக கொத்தணி அடிப்படையில் இரத்ததான முகாம் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் கோப்பாய் பிரதேச செயலக பிரிவிலுள்ள அச்சுவேலி கொத்தணி நிகழ்வு அச்சுவேலி மத்திய கல்லூரியில் உதவி பிரதேச செயலாளர் திருமதி எஸ். அபர்ணா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கலந்து கொண்டார்.

இதன்போது 47 பேர் இரத்த தானம் வழங்கினர்.

ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியாக கொத்தணி அடிப்படையில் இரத்த தானம் வழங்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள நிலையில், அடுத்த இரத்த தான நிகழ்வு எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி நெடுந்தீவு பிரதேசத்தில் நடைபெறவுள்ளது.

(எ)

# நல்லூரில் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர்

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 01

நல்லூர் உற்சவகாலப் பெருந் திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடரின் நான்காம் நாள் நிகழ்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத் தலைவர், பேராசிரியர் திருமதி விக்னேஸ்வரி பவநேசன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

கலை நிகழ்வுகளை கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவின் ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலை, உரும்பிராய் நாகலிங்கேஸ்வரர் அறநெறிப் பாடசாலை, உரும்பிராய் கற்பக விநாயகர் அறநெறிப் பாடசாலை, ஊரெழு ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை, உரும்பிராய் பராசக்தி அறநெறிப் பாடசாலை, ஆவரங்கால் நடராஜ இராமலிங்க அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கவுள்ளனர்.

சிறப்புக் கலை நிகழ்வை கிளிநொச்சி மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கவுள்ளனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீதான வரி விதிப்பில் அமெரிக்க நிலைப்பாடு என்ன?

## திரிசங்கு நிலையில் ஏற்றுமதியாளர்கள்

கொழும்பு, ஒக. 01

**பரஸ்பர வரி விதிப்பு தொடர்பில் அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தையில் இன்னும் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடப்படாத நிலையில் இன்று முதல் இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அமெரிக்கா 30 வீத பரஸ்பர வரி விதிப்பதால், இலங்கை ஏற்றுமதியாளர்கள் தொடர்ந்தும் பதற்றத்தில் உள்ளனர்.**

அமெரிக்க வர்த்தக மறுசீரமைப்பு முன்முயற்சியின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த வரி, பிராந்தியம் முழுவதும் மாறுபட்ட விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கைக்கு ஒதுக்கப்பட்ட விகிதம் மிக உயர்ந்த ஒன்றாக இருந்தாலும், பல போட்டி நாடுகள் ஏற்கனவே சலுகைகளைப் பெற்றுள்ளன.

வியட்நாமுக்கு 20 வீத வரி விகிதம் ஒதுக்கப்பட்டுள்ளது. இது பிராந்தியத்திலேயே மிகக் குறைந்த ஒன்றாகும்.

அதே நேரத்தில் ஆரம்பத்தில் 35 வீத வரியை எதிர்கொண்ட பங்களாதேஷ், பேச்சுவார்த்தைகளின் இறுதிக் கட்டத்தில் உள்ளது.

அமெரிக்காவுக்கு வர்த்தகம் மற்றும் கொள்முதல் ஒப்பந்தங்களின் தொகுப்பை வழங்கிய பிறகு குறைப்பைப் பெறும் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

ஜூலை 30 அன்று ஜனாதிபதி ட்ரம்ப் வெளியிட்ட முறையான அறிவிப்பைத் தொடர்ந்து, இந்தியாவுக்கு இப்போது அதிகாரபூர்வமாக 25 வீத வரி விதிக்கப்பட்டுள்ளது.

இந்த விகிதம் இன்று முதல் அமுலுக்கு வரும்.

இதற்கிடையில், கம்போடியா 36 வீத வரிக்கு உட்பட்டது, வெற்றிகரமான மறு பேச்சுவார்த்தைக்கான எந்த அறிகுறியும் இன்னும் இல்லை.

அமெரிக்க வர்த்தக பிரதிநிதி அலுவலகத்துடன் உயர் மட்ட கலந்துரையாடல்களுக்காக இலங்கை வர்த்தகக் குழு ஒன்று தற்போது வொஷிங்டனில் உள்ளது.

இருப்பினும், ஜூலை 30 ஆம் திகதி வரை, 30 வீத விகிதத்தில் எந்த மாற்றமும் குறித்து அதிகாரபூர்வ புதுப்பிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை.

கடந்த 29 அன்று ஊடகங்களுக்குப் பேசிய நிதி அமைச்சர் அனில் ஜெயந்த, அரசாங்கம் ஏற்கனவே தனது திட்டங்களை அமெரிக்காவிடம் சமர்ப்பித்துள்ளதாகவும், கருத்துக்காகக் காத்திருப்பதாகவும் கூறினார்.

முன்னர் நிலையான உரையாடல் மூலம் விகிதத்தை 44 வீதத்திலிருந்து 30 வீதமாகக் குறைத்தோம்.

பேச்சுவார்த்தைகள் இன்னும் நடந்து கொண்டிருக்கின்றன. முதலாம் திகதிக்குள் பதிலை எதிர்பார்க்கிறோம் என்று அவர் கூறினார்.

இலங்கையின் மிகப்பெரிய ஏற்றுமதித் துறையான ஆடைத் துறை மிகவும் பாதிக்கப்படக் கூடியது.

இது மொத்த ஏற்றுமதியில் கிட்டத்தட்ட 40 வீதம் ஆகும். மேலும் 300,000 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர்.

அமெரிக்கா அதன் மிகப் பெரிய ஒற்றை சந்தையாகும்.

30 வீத வரி விலை போட்டித்தன்மையைக் குறைக்கும் என்பதால் இது குறைந்த வரிகளைக் கொண்ட நாடுகளுக்கு வாய்ப்புகளை அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# கண்டி மாவட்டத்தில் மீண்டும் வனவிலங்குகள் கணக்கெடுப்பு

கொழும்பு, ஒக. 01

வனவிலங்குகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களைக் கருத்தில் கொண்டு கண்டி மாவட்டத்தில் மீண்டும் வனவிலங்கு கணக்கெடுப்பை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தில் கடந்த கால கணக்கெடுப்பின் போது பதிவான அதிக விலங்கு எண்ணிக்கை குறித்து எழுந்த சந்தேகங்கள் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்த அறிவியல் கணக்கெடுப்பு பேராதனை மற்றும் கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களின் பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட உள்ளது.

மேலும் அதன் மேற்பார்வை பேராதனை பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவ பீடத்தின் பேராசிரியர் அசோக தங்கொல்ல உள்ளிட்ட குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த கணக்கெடுப்பு ஒரு சில நாட்களுக்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, மேலும் இந்த கணக்கெடுப்பு எவ்வாறு அறிவியல் ரீதியாக நடத்தப்பட்டது என்பது குறித்த விரிவான அறிக்கை இரண்டு வாரங்களுக்குள் ஜனாதிபதியின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

கணக்கெடுப்புக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் விவசாய அமைச்சின் மூலம் வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டம் முழுவதும் மந்தி, மயில், குரங்கு மற்றும் மர அணில் போன்ற விலங்குகள் மீது இந்த கணக்கெடுப்பு நடத்தப்படும். இந்த கணக்கெடுப்பின் முடிவுகளின் அடிப்படையில், தொடர்புடைய விலங்குகளைக் கட்டுப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைத் தீர்மானிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் 15 ஆம் திகதி காலை 8.00 மணி முதல் காலை 8.05 மணி வரை நாடு முழுவதும் நடத்தப்பட்ட வனவிலங்கு கணக்கெடுப்பின்படி, கண்டி மாவட்டத்தில் 634,668 மந்திகள், 163,929 மர அணில்கள், 106,582 மயில்கள் மற்றும் 86,834 குரங்குகள் இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

இருப்பினும், மாவட்டத்தில் இவ்வளவு பெரிய விலங்கு எண்ணிக்கை இருப்பது குறித்து கவலைகள் எழுந்துள்ளதால், இந்த புதிய அறிவியல் கணக்கெடுப்பு அவசியமாகியுள்ளது.

தொடர்புடைய கணக்கெடுப்பு தரவுகளின்படி, நாட்டில் வனவிலங்குகளால் ஏற்படும் இரண்டாவது அதிக சேதம் கேகாலை மாவட்டத்திலும், மூன்றாவது அதிக சேதம் குருநாகல் மாவட்டத்திலும் பதிவாகியுள்ளது.

(அ)

# இலங்கை பணியாளர் விவகாரம்: தென்கொரியாவுக்குப் பாராட்டு!

கொழும்பு, ஒக. 01

புலம்பெயர் இலங்கை தொழிலாளர் ஒருவர், தென்கொரியாவில் மோசமாக நடத்தப்பட்டமை தொடர்பில் அந்த நாட்டின் ஜனாதிபதி லீ ஜே-மியுங் எடுத்த உடன் நடவடிக்கையை பாராட்டியுள்ள இலங்கை அரசாங்கம் நன்றியையும் தெரிவித்துள்ளது.

இலங்கையைச் சேர்ந்த பணியாளர் ஒருவர் போர்க்லிப்ட்டில் கட்டிவைக்கப்பட்டு தூக்கிச் செல்லப்படுவதை காட்டும் காணொளியொன்று அண்மையில் சமூக வலைத்தளங்களில் வைரலானது.

இது பரவலாக பொது மக்களிடையே சீற்றத்தையும் கண்டனத்தையும் தூண்டியது.

இதற்கு பதிலளிக்கும் விதமாக, ஜனாதிபதி லீ ஜே மியுங் இந்த சம்பவத்தை மனித உரிமை மீறல் என்று கண்டித்ததுடன் முழுமையான விசாரணைக்கும் உத்தரவிட்டார்.

இந்தநிலையில் தமது உத்தியோகபூர்வ எக்ஸ் பக்கத்தில் பதிவொன்றை வெளியிட்டுள்ள வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், புலம்பெயர்ந்த பணியாளர்களின் உரிமைகளை நிலைநிறுத்துவதற்கான தென் கொரியாவின் விரைவான நடவடிக்கைகளை பாராட்டியுள்ளார். (அ)

# "ஆடை விவகாரத்தில் பெண் கைது அடிப்படை உரிமையை மீறுவதாகும்"

கொழும்பு, ஒக. 01

2019 ஆம் ஆண்டு தர்ம சக்கரம் போன்ற சின்னம் கொண்ட ஆடையை அணிந்தற்காக ஒரு பெண்ணைக் கைது செய்து காவலில் வைத்தது அவரது அடிப்படை உரிமைகளை மீறுவதாகும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கொலொங்கொடையைச் சேர்ந்த அப்துல் ரஹீம் மசாஹினா என்ற அந்தப் பெண், ஐ.சி.சி.பி.ஆர் சட்டத்தின் கீழ் அப்போதைய ஹசலக பொலிஸ் பொறுப்பதிகாரி சந்தன நிஷாந்தவால் கைது செய்யப்பட்டார்.

இருப்பினும், அந்த உடையி லிருந்த வடிவமைப்பு ஒரு மதச் சின்னம் அல்ல, கப்பல் திசைமாற்றி சக்கரம் போன்றது என்பது பின்னர் தெரியவந்தது.

நீதியரசர்கள் குமுதுனி விக்ரமசிங்க மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோருடன் ஒருமனதாகத் தீர்ப்பை வழங்கிய நீதியரசர் யசந்த கோடகொட,

அந்த அதிகாரிக்குத் தனிப்பட்ட முறையில் ரூ.30,000 இழப்பீடு வழங்க உத்தரவிட்டார்.

பொலிஸ் நிலையங்களில் ஐ.சி.சி.பி.ஆர் சட்டத்தை அமுல்படுத்துவது குறித்து சட்டமா அதிபரின் ஒப்புதலுக்கு உட்பட்டுத் தெளிவான வழிகாட்டுதல்களை வெளியிடுமாறும் நீதிமன்றம் பதில் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டது.

மசாஹினாவின் சட்டத்தரணி புலஸ்தி ஹேவமன்ன, தனது கட்சிக்காரரின் ஆடையில் புனிதமான புத்த சின்னம் இருப்பதாக தவறாக நம்பியதன் கீழ் தவறாகக் கைது செய்யப்பட்டதாகவும், சோதனையில் அது பொய்யானது என்றும் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

(அ)

# இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை ஒப்பந்தத்தை இரத்து செய்யக்கோரி மனு!

கொழும்பு, ஒக. 01

இந்தியாவுடன் இலங்கை அரசாங்கம் கைச்சாத்திட்ட இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செல்லுபடியற்றதாக்கி உத்தரவிடக் கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சமூக ஆர்வலர் அமானி ரிஷாத் ஹமீத் தாக்கல் செய்த இந்த மனுவின் பிரதிவாதிகளாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் டிஜிற்றல் பொருளாதார அமைச்சர் உள்ளிட்டோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

இந்த திட்டத்தின் மூலம் இலங்கை குடிமக்களின் கைவிரல் அடையாளம் உள்ளிட்ட தரவுகள் இந்தியாவுக்கு வழங்கப்படும் அபாயம் இருப்பதாகவும், இது நாட்டின் இறையாண்மை மற்றும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும் எனவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான அமைச்சரவை முடிவுகள், பொதுமக்கள் மற்றும் பாராளுமன்றத்துக்கு தெரியப்படுத்தப்படாமல் இரகசியமாக எடுக்கப்பட்டதாகவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தினால் அடிப்படை உரிமைகள் மீறப்படுகிறது என்பதால் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும், தொடர்புடைய அமைச்சரவை முடிவுகளையும் வலுவற்றதாக்கி உத்தரவு வழங்குமாறும் மனுதாரர் கோரியுள்ளார்.

அத்துடன், இந்த அடையாள அட்டை திட்டத்தை செயல்படுத்துவதைத் தடுப்பதற்கும் உத்தரவொன்று பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் மனுவில் கோரப்பட்டுள்ளது. (அ)

# தேயிலைத் துறை உற்பத்தியை அதிகரிப்பதற்கு சீனா பங்களிப்பு

கொழும்பு, ஒக. 01

இலங்கையின் தேயிலைத் துறை உற்பத்தியை அதிகரிப்பதற்கு, பங்களிப்பை வழங்குவதாகச் சீனா அறிவித்துள்ளது.

இதன்படி, வெளிநாடுகளின் தேயிலைத் தோட்டங்களில் மேற்கொள்ளப்படும், சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத பூச்சி கட்டுப்பாட்டுத் தொழில்நுட்பங்களை, இலங்கை போன்ற நாடுகளில் அறிமுகப்படுத்துவதாக சீனாவின் குய்சோ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஜாங் லிபோ தெரிவித்துள்ளார்.

இலங்கையைப் பொறுத்தவரை, இந்த முறைகளை ஏலவே ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதனூடாக தேயிலையின் உற்பத்தி மற்றும் தரம் என்பனவும் மேம்படும் என்று ஜாங் லிபோ தெரிவித்துள்ளார்.

தேயிலை ஒரு முக்கிய பணப் பயிராக உள்ள இலங்கையில் இந்த கூட்டு முயற்சி உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகில் அதிக தேயிலையை உற்பத்தி செய்யும் முதல் 5 நாடுகளில் இலங்கையும் இடம்பெற்றுள்ளது என்பதனை சுட்டிக் காட்டியுள்ள அவர், சீனாவின் குய்சோவை போன்றே இலங்கையிலும் மலைப்பகுதிகளில் தேயிலை உற்பத்தி செய்யப்படுவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜதந்திரத்தை மகிந்தவிடம் கற்றுக்கொள்ளவேண்டும் அநுர!

## கூறுகிறார் சஞ்ஜீவ எதிரிமான்ன

கொழும்பு, ஓக. 01

"போர்க் காலத்தில் பலம்பொருந்திய நாடுகளுடன் இராஜ தந்திர சமரில் ஈடுபட்ட தலைவர்தான் மகிந்த ராஜபக்ஷ. எனவே, இராஜதந்திரம் என்றால் என்னவென்பது தொடர்பில் ஜனாதிபதி அநுர, மகிந்தவிடம் கேட்டு, கற்றுக்கொள்ள வேண்டும்."

-இவ்வாறு பொதுஜன பெரமுன கட்சியின் ஊடகப் பேச்சாளர் சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

போர்க் காலத்தில் மகிந்த ராஜபக்ஷ பல இராஜதந்திர பிரச்னைகளை எதிர்கொண்டார். அப்படியான பிரச்னைகள் தற்போது வருமானால் இந்த அரசு நடுங்கிவிடும்.

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு மகிந்த எடுத்த முடிவால் உலகில் பலம்பொருந்திய நாடுகள் ஓரணியில் திரண்டன. இந்நிலையில் அவற்றைக் கையாள்வதற்கு மகிந்த கையாண்ட இராஜதந்திர, அரசியல் அனுபவத்தை



ஒருபோதும் மறக்க முடியாது.

அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மன், பிரிட்டன் ஆகிய நாடுகளின் தலைவர்களுடன்தான் மஹிந்த இராஜதந்திர நடவடிக்கையில் ஈடுபட்டார்.

எனவே நேரம் கிடைக்கும் பட்சத்தில் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து இராஜதந்திர மற்றும் அரசியல் தொடர்பில் அனுபவத்தை பெற்றுக்கொள்ளுமாறு தற்போதைய ஜனாதிபதிக்கு கூறுகின்றோம்-என்றார். (அ)

# வீஸா நிபந்தனை மீறிய 155 இந்தியர்கள் கைது!

கொழும்பு, ஓக. 01

இலங்கையில் விஸா நிபந்தனைகளை மீறியதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறை அதிகாரிகள் 155 இந்தியர்களை கைது செய்துள்ளனர்.

இந்நிலையில் அவர்கள் தனிப்பட்ட விஸா கட்டணமான 200 அமெரிக்க டொலர்களை செலுத்தவும், 500 அமெரிக்க டொலர்களை அபராதமாக செலுத்துமாறும் வலியுறுத்தப்பட்டனர்.

இதன்போது பெறப்பட்ட 33.5 மில்லியன் ரூபாய் வருமானம், இலங்கை குடிவரவுத் திணைக்களத்துக்கு வரலாற்றில் ஒரு நாளில் கிடைத்த அதிக வருமானமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணையச் சந்தை மற்றும் பந்தய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த அலுவலகம் ஒன்றைச் சோதனை செய்தபோதே, இந்த இந்தியர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சோதனையின் போது கைது செய்யப்பட்ட 25-54 வயதுக்குட்பட்ட குறித்த இந்தியர்கள், வதிவிட விஸாக்களில் இலங்கைக்கு வந்து ஒரு மாதம் முதல் ஒரு வருடம் வரை தங்கி, உள்ளூர் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வந்தனர்.

இதேவேளை வெலிசறையில் உள்ள குடிவரவுத் திணைக்களத்தின் தடுப்பு மையத்தில் இடப்பற்றாக்குறை காரணமாக, தேவையான அபராதங்களை செலுத்திய பிறகு உடனடியாக நாட்டை விட்டு வெளியேறுமாறு குறித்த இந்திய நாட்டவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# மீனவர் சமூகத்தினருக்கு விசேட காப்பீட்டுத் திட்டம்

கொழும்பு, ஓக. 01

உப்பு நீர் மற்றும் நன்னீரில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் மீனவ சமூகத்தினருக்கு விசேட காப்பீட்டுத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பாதகமான வானிலை காரணமாக ஏற்படக்கூடிய உயிர் இழப்பு அல்லது பிற எதிர்பாராத நிகழ்வுகள் அல்லது மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும்போது ஏற்படக்கூடிய ஏதேனும் விபத்துக்களின்போது இந்த காப்பீட்டுத் திட்டம் வழங்கப்படவுள்ளது.

இதன் கீழ் 2000 ரூபாய் என்ற வருடாந்த காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், திடீர் மரணம் ஏற்பட்டால் 12 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கப்படும்.

அத்தோடு, விபத்தின் காரணமாக ஒரு கண் இழப்பு, ஒரு மூட்டு இழப்பு மற்றும் முழுமையான பேச்சு இழப்பு போன்ற விடயங்களுக்காக மிக விரைவாக இழப்பீடு வழங்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வேளாண்மை மற்றும் விவசாய காப்பீட்டுச் சபை தெரிவித்துள்ளது. (அ)

# கண்டி ஏரியில் சடலம்!

கொழும்பு, ஓக. 01

கண்டி எசல பெரஹெராவில் பங்கேற்ற யானைப் பாகனின் உதவியாளர் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை கண்டி ஏரியின் கரையில் மிதந்து கொண்டிருந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டது.

இறந்தவர் கண்டியில் நடைபெறும் வருடாந்த எசல பெரஹெராவில் பங்கேற்க அரநாயக்க பகுதியிலிருந்து வந்திருந்தார்.

ஊர்வலத்தில் பங்கேற்ற யானையின் பாகனுக்கு உதவியாளராக அவர் பணியாற்றி வந்தார்.

இறந்தவர் அச்சலங்க என்ற 28 வயது இளைஞர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (அ)

# இராணுவத் தளபதியின் சேவைக்காலம் நீடிப்பு!

கொழும்பு, ஓக. 01



இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லசந்த றொட்ரிக்கோவின் சேவைக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த றொட்ரிக்கோவுக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் மேலும் ஒரு வருட கால சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் 25ஆவது இராணுவத் தளபதியாக லெப்டினன்ட் ஜெனரல் லசந்த றொட்ரிக்கோ கடந்த வருடம் டிசெம்பர் 30ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில் அனுபவமிக்க இராணுவ அதிகாரியான, லெப்டினன்ட் ஜெனரல் றொட்ரிக்கோ முன்னர் இலங்கை இராணுவத்தின் பிரதிப் பிரதானியாக பணியாற்றியுள்ளதுடன் பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பணியாளர்கள் கல்லூரியின் தளபதியாகவும் செயற்பட்டுள்ளார். (அ)

# ஆயிரம் பெண் உத்தியோகத்தர்களை பொலிஸ் சேவையில் இணைக்க முடிவு

கொழும்பு, ஓக. 01

பொலிஸ் சேவையில் 1,000 பெண் உத்தியோகத்தர்களை நியமிக்க முடிவு செய்துள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு அடுத்த வாரம் வெளியிடப்படும் என்று அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார். மேலும் 5,000 பொலிஸ் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர் காணல்கள் ஏற்கனவே தொடங்கிவிட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

பொலிஸ்துறையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இது செயற்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் இரு பிள்ளைகளின் தாய் பலி!

கொழும்பு, ஓக. 01

மருதானையில் இருந்து நாவலப்பிட்டி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள், லொறி ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த மருதானை பகுதியைச் சேர்ந்த 44 வயதான பெண் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை குறித்த மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற அவரது கணவர் நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தம்பதியினர், நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் உறவினரை பார்வையிட சென்றுள்ள வேளை ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் மில்லகஹமுல பகுதியில் கொழும்பிலிருந்து வட்டவளை நோக்கி சென்ற லொறி ஒன்றை முந்திச் செல்ல முற்பட்டபோது விபத்தில் சிக்கியுள்ளனர்.

இதன்போது குறித்த பெண் லொறியின் பின்புற சக்கரத்துக்குள் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த விபத்து தொடர்பில் லொறியின் சாரதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 43 பேரிடம் வாக்குமூலம் பெற்றால் "பி" அறிக்கை சமர்ப்பிக்காதது ஏன்?

## நிசாம் காரியப்பர் கேள்வி

கொழும்பு, ஓக. 01

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் சம்பவம் தொடர்பில் 43 பேரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொண்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார். ஆனால் அந்த வாக்குமூலம் தொடர்பான "பி" அறிக்கை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இந்த அறிக்கையை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்காமலிருப்பதற்குரிய காரணம் என்னவென்பதில் பாரிய சந்தேகம் காணப்படுகிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-2025.01.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் சம்பவம் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து நான் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபாலவிடம் கேள்வியை முப்பட்டது.

35882 -24 இலக்க வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 43 பேரிடம் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எதிர்பார்க்கப்பட்டதை காட்டிலும் விசாரணைகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுகின்றது என்று அமைச்சர் ஆனந்த விஜேபால பதிலளித்திருந்தார்.

இந்த வழக்குடன் தொடர்புடைய "பி"அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு நான் முயற்சித்தேன். இருப்பினும் என்னால் அந்த அறிக்கையை ஆரம்பத்தில் பெற்றுக்கொள்ள முடியவில்லை. சுரேஷ் சாலேயின் சட்டத்தரணியும் இந்த "பி" அறிக்கையை பெற்றுக் கொள்ள கோரியிருந்தார்.

அமைச்சர் ஆனந்த விஜேபால குறிப்பிட்டதற்கமைய 43 பேரின் வாக்குமூலத்தின் சாராம்சம் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கும் என்று எதிர்பார்த்தேன். தண்டனைச் சட்டக்கோவையின் 115 ஆவது பிரிவின் பிரகாரம் ஏதேனும் "பி" அறிக்கையை சமர்ப்பித்ததன் பின்னர் அந்த விசாரணையின் முன்னேற்றத்தை விசாரணை அதிகாரிகள் நீதவானுக்கு சமர்ப்பிக்க வேண்டும். இருப்பினும் பெற்றுக் கொண்ட வாக்குமூலத்தின் சாராம்சம் நீதவானுக்கு முன்னிலைப் படுத்தப்படவில்லை.

43 பேரின் வாக்குமூலத்தை பதிவு செய்து விட்டு ஏன் அவற்றை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கவில்லை என்ற பிரச்சினை காணப்படுகிறது. இதில் காணப்படும் இரகசியம் என்னவென்பதை அறிய முடியவில்லை.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் நான் வெளிப்படுத்திய விடயங்கள் குறித்து அரசாங்கம் எவ்வித அவதானமும் செலுத்தவில்லை. அலட்சியப்படுத்தும் போக்கில் செயற்படுகிறது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் தலைமையகத்தின் இரு அதிகாரிகள் பணி நீக்கம்

கொழும்பு, ஓக. 01

பொலிஸ் காவலில் இருந்த சந்தேக நபர் தப்பிச் சென்ற சம்பவம் தொடர்பில் இரத்தினபுரி பொலிஸ் தலைமையகத்தின் இரண்டு அதிகாரிகள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு சார்ஜன்ட் மற்றும் ஒரு கான்ஸ்டபிளை இடைநீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எவ்.யு.வுட்லர் தெரிவித்துள்ளார்.

பல குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட சந்தேக நபர் ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, மேலதிக விசாரணைகளுக்காக இரத்தினபுரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

பொலிஸ் நிலையத்தின் தடுப்புக் காவலில் இருந்த சந்தேக நபர், நேற்று முன்தினம் கழிப்பறையைப் பயன்படுத்த வேண்டும் என கூறியதாகவும், அப்போது சிறைக் கதவு திறக்கப்பட்டபோது பொலிஸ் அதிகாரிகளிடமிருந்து தப்பிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சந்தேக நபர் இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்தவர் என்பதுடன், சமீபத்தில் பாணந்துறை பகுதியில் நடந்த பல துப்பாக்கிச் சூடு சம்பவங்களிலும் அவர் தொடர்புடையவர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

சந்தேக நபர் தப்பிச் சென்ற சம்பவம் தொடர்பாக இரத்தினபுரி பொலிஸ் தலைமையகத்தில் விடயத்திற்கு பொறுப்பாக செயற்பட்ட அதிகாரியும், சம்பவத்தின்போது பொலிஸ் நிலையத்துக்கு பொறுப்பாக இருந்த அதிகாரியும் இவ்வாறு பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தப்பிச் சென்ற சந்தேகநபரை கைது செய்வதற்காக விசேட பொலிஸ் குழுவொன்று கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார். (அ)

# கடந்த 6 மாதங்களில் மட்டும் இலஞ்சம் பெற்ற 34 பேர் கைது

## இலஞ்சம் வழங்கிய 06 பேரும் சிக்கினர்

கொழும்பு, ஓக. 01

**இந்த வருடத்தின் முதல் 6 மாதங்களில் இலஞ்சம் கோரிய சம்பவங்கள் தொடர்பில் 34 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

இந்த வருடத்தின் ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூன் 30 ஆம் திகதி வரை 3,022 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த காலகட்டத்தில் 54 சோதனை நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளதோடு, 34 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களில் இலங்கை பொலிஸ் துறையைச் சேர்ந்த 10 அதிகாரிகள், நீதி அமைச்சின் ஐந்து அதிகாரிகள், சுகாதார அமைச்சின் இரண்டு அதிகாரிகள் மற்றும் இலங்கை போக்குவரத்து சபையைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகள் அடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த வருடத்தின் முதல் 6 மாதங்களில் இலஞ்சம் வழங்க முற்பட்ட சம்பவங்கள் தொடர்பில் பொதுமக்களில் 6 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

கடந்த வருடத்தில் இலஞ்சம் கோரிய சம்பவங்கள் தொடர்பாக நாடு முழுவதும் உள்ள பல்வேறு நீதிமன்றங்களில் 60 சந்தேக நபர்களுக்கு எதிராக 50 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மேலும், குறித்த காலப்பகுதியில் 6 வழக்குகள் நிறைவடைந்துள்ளதாகவும், நாடு முழுவதும் உள்ள நீதிமன்றங்களில் இலஞ்சம் பெற்றமை தொடர்பாக 273 வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நாடு திரும்பினார் அநுர!

கொழும்பு, ஓக. 01

கடந்த 28 ஆம் திகதி ஆரம்பித்த மாலைதீவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை நிறைவு செய்து, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று முன் தினம் இரவு நாடு திரும்பினார்.

மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்சுவின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி இந்த உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார்.

இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின்போது, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்சுவுடனும் மாலைதீவு அமைச்சரவை அமைச்சர்கள் உட்பட அரச பிரதானிகளுடனும் பரஸ்பர முக்கியத்துவம் வாய்ந்த இருதரப்பு, பிராந்திய மற்றும் சர்வதேச பிரச்னைகள் குறித்து விரிவான கலந்துரையாடல்களையும் நடத்தினார்.

இதன்போது இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையிலான பரஸ்பர சட்ட உதவி வழங்கல் தொடர்பான ஒப்பந்தம் மற்றும் மாலைதீவு வெளியுறவு சேவை நிறுவனம் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பனவும் பரிமாறப்பட்டன.

இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின்போது, 60 ஆண்டுகளாக இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல் நம்பிக்கை, மக்களுக்கு இடையிலான நெருக்கமான உறவுகள் மற்றும் நல்லெண்ணத்தின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட நட்பு மற்றும் பன்முக ஒத்துழைப்பை மேம்படுத்துதல் குறித்து ஜனாதிபதி வலியுறுத்தினார்.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் சிரேஷ்ட அரச அதிகாரிகள் குழுவினரும் இந்த விஜயத்தில் இணைந்திருந்தனர். (அ)

# கடவுச்சீட்டுக்களை அச்சிட விலைமனு கோரப்பட்டுள்ளது

கொழும்பு, ஓக. 01

இலத்திரனியல் கடவுச் சீட்டுக்களை அச்சிடுவதற்கான விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளுமாறு குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் அறிவித்தல் விடுத்துள்ளது.

இந்த விலைமனுக் கோரலுக்கான அழைப்பு எதிர்வரும் 7 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படும் என்று அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையில் ஒரு நாள் சேவையின் கீழ் விண்ணப்பிக்கப்பட்ட கடவுச்சீட்டுக்கள் தாமதமின்றி வழங்கப்பட்டு வருவதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தினமும் சுமார் 3,150 கடவுச்சீட்டுக்கள் வழங்கப்படுவதாகவும் கடவுச்சீட்டுக்களுக்கான விண்ணப்பங்கள் காலை 6.30 முதல் பிற்பகல் 2 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# ரெலிகிராமில் பெண்களின் ஆபாச படங்கள் விற்பனை!

கொழும்பு, ஓக. 01

ரெலிகிராம் சமூக ஊடக கணக்கின் மூலம் பெண்கள் மற்றும் யுவதிகளின் ஆபாசப் படங்கள் விற்பனை செய்யப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சமூக ஊடகங்கள் மூலம் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சமூக ஊடக செயற்பாட்டாளரான சான்யா ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, ரெலிகிராம் சமூக ஊடக பயனாளர்களுக்குப் படங்களை அனுப்பி பணம் ஈட்டப்படுவதாக அவர் தமது சமூக ஊடகப் பக்கத்தில் அவர் கூறியிருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் சமூக ஊடகங்களில் பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்த பின்னணியிலேயே, குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் பிரீத்தி இனோகா ரணசிங்க தெரிவித்தார். (அ)

# காலியில் துப்பாக்கிச் சூடு 23 வயது இளைஞர் மரணம்

கொழும்பு, ஓக. 01

காலி மாவட்டம் கொஸ்கொட தூவமோதர பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று அதிகாலை 5.15 மணியளவில் இடம்பெற்றதாகவும், மோட்டார் சைக்கிளில் வந்த இருவரினால் குறித்த துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எப்.யு.வுட்லர் தெரிவித்தார்.

சம்பவத்தில் 23 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவத்துக்கு ரி-56 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவம் குறித்து கொஸ்கொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (அ)

# வட்ஸ் அப் பயனர்களைக் குறிவைத்து சைபர் மோசடி சம்பவங்கள் அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 01

வட்ஸ் அப் பயனர்களை குறிவைத்து, சைபர் மோசடி சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில், பயனர்கள் ஓரிபி எனப்படும் ஒருமுறை மட்டுமே பயன்படுத்த கூடிய கடவுச் சொற்கள் உள்ளிட்ட எந்த தகவல்களையும் யாரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டாம் என குற்றப் புலனாய்வுத் திணைக்களம் வலியுறுத்தியுள்ளது.

மோசடியாளர்கள், பாதிக்கப்பட்ட நபரின் கையடக்கத் தொலைபேசிக்கு ஓரிபி இலக்கத்தை குறுந்தகவல்கள் ஊடாக அனுப்பி வைப்பார்கள்.

அதன் பின்னர் வேறொரு தொலைபேசியில் இருந்து, எமது வட்ஸ் அப்பிற்கு ஒரு செய்தி வரும்.

அதில் வட்ஸ் அப் கணக்கிற்கான ஆறு இலக்க குறியீடு, உங்களது எண்ணுக்கு தவறாக அனுப்பப்பட்டு விட்டதாகவும் அந்த ஓரிபி குறியீட்டை பகிருமாறும் மோசடியாளர்கள் கோருவார்கள்.

எந்த சூழ்நிலையிலும் ஓரிபி இலக்கத்தை பகிர்வதை தவிர்க்க வேண்டும்.

ஓரிபி இலக்கத்தை பகிர்ந்தால், வட்ஸ் அப் கணக்கு ஹக் செய்யப்பட்டு அது சைபர் குற்றவாளிகள் கட்டுப்பாட்டுக்கு சென்றுவிடும்.

அதன் பின்னர் அவர்கள், வட்ஸ் அப்பை பயன்படுத்தி, ஆள் மாறாட்டம் செய்து அவருடைய நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு செய்தி அனுப்புவர்.

அவற்றில் அவசர உதவி, விபத்துச் செலவுகள், மருத்துவத் தேவைகள் போன்றவற்றுக்காக பண உதவி கோருவர்.

இதனால் தகவல் பெறும் நபர், பணத்தை அனுப்பிவிட்டு பின்னர்தான் இது ஒரு மோசடி என்பதை உணர்கிறார்.

நீங்கள் ஓரிபி இலக்கத்தை பெற்றால் அதை யாருடனும் பகிர வேண்டாம்.

இதுபோன்ற நிதி மோசடிகள் தொடர்ந்து இடம்பெறுவதால் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என குற்றப் புலனாய்வுத் திணைக்களம் வலியுறுத்தியுள்ளது. (அ)

# இலங்கையர்களுக்கு இலவச சுற்றுலா விஸாக்கள் வழங்க மாலைதீவு முடிவு

கொழும்பு, ஓக. 01

சுற்றுலா நோக்கங்களுக்காக மாலைதீவு செல்லும் இலங்கை பிரஜைகளுக்கு 90 நாள் இலவச சுற்றுலா விஸாக்களை வழங்க மாலைதீவு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் மாலைதீவு விஜயத்துக்கு இணையாக இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த விசாக்களை வழங்குவது நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வந்துள்ளதுடன் விஸாக்களை பெறுவதற்கு செல்லுபடியாகும் கடவுச்சீட்டு வைத்திருத்தல் மற்றும் மாலைதீவில் தங்கியிருக்கும் காலத்தில் தமது செலவுகளை ஈடு செய்யப் போதுமான பணம் தங்களிடம் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

மாலைதீவு குடியரசுக்கும் இலங்கைக்கும் இடையிலான விஸா வசதி வழங்கல் ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் மாலைதீவின் குடிவரவுச் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டு, இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர ஒத்துழைப்பை நோக்கமாகக் கொண்டு, இந்த விஸா வசதி வழங்கப்படுவதாக மாலைதீவு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக வலைத்தள வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்

## மட்டக்களப்பில் விழிப்புணர்வு பேரணி




மட்டக்களப்பு, ஓக. 01

மட்டக்களப்பில் "சமூக வலைத்தளங்கள் மூலம் ஏற்படுத்தப்படும் வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்" எனும் தொனிப்பொருளில் சர்வமத தலைவர்களின் விழிப்புணர்வுப் பேரணி நேற்று முன்தினம் புதன்கிழமை மட்டக்களப்பு தாண்டவன்வெளி தேவாலயத்தின் முன்னால் ஆரம்பமாகி காந்தி பூங்கா வரை சென்றது.

இலங்கை சமாதான பேரவையின் அனுசரணையுடன் மாவட்ட சர்வமத பேரவையின் மாவட்ட இணைப்பாளர் இரா. மனோகரனின் ஏற்பாட்டில் இந்த விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது. அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூக செயல்பாட்டாளர்கள், மதத் தலைவர்கள் மற்றும் மாநகர சபை முதல்வர் சிவம் பாக்கியநாதன் உட்பட மாநகர சபை உறுப்பினர்களும் இதில் கலந்து கொண்டனர்.

"வன்முறை எங்கு நடைபெற்றாலும் குற்றமே இணையத்திலும் கூட", "பாதுகாப்பான இணையம் எங்கள் உரிமை", "இணையத்தில் பெண்களை அடக்க முயலாதே நாங்கள் மீண்டெழுவோம்", "இணைய வன்முறையை நிறுத்து" "பொய்யான செய்திகளை பரப்பாதீர்கள்", "இணையதள வன்முறையை தோற்கடிக்க நாம் அனைவரும் ஒன்றிணைவோம்" போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு சென்றனர். நகர பொலிஸ் நிலைய சுற்றுவட்டம் வரை சென்று அங்கிருந்து காந்தி பூங்காவை அடைந்து அங்கு பதாதையில் கையெழுத்து இட்ட பின்னர் போராட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (எ)

# "வாரத்தில் ஒரு நாள்" திட்டம் ஆரம்பமானது

அட்டாளைச்சேனை, ஓக. 01

அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனை பிரதேச சபையால் "வாரத்தில் ஒரு நாள்" வேலைத்திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாவும் இந்தத் திட்டத்தை வாராந்தம் செயல்படுத்தவுள்ளதாகவும் தவிசாளர் எம். உவைஸ் தெரிவித்தார்.

"வாரத்தில் ஒரு நாள்" வேலைத்திட்டத்தின் ஆரம்பப் பணியை அட்டாளைச்சேனை - 16 ஆம் பிரிவில் ஆரம்பித்து வைத்துள்ளோம். இந்தத் திட்டம் அட்டாளைச்சேனை பிரதேசத்திலுள்ள அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் வாரத்தில் ஒருநாள் செயல்படுத்தப்படுகின்ற அதேவேளை, இந்தப் பிரிவிலுள்ள பொதுமக்களின் முறைப்பாடுகளுக்கு பதிலளித்தல், பொருத்தமான இடங்களுக்கும், ஒளிராமல் இருக்கின்ற மின் விளக்குகளை மாற்றியமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், வடிகான்களை துப்புரவு செய்தல், திண்மக் கழிவுகளை முறையாக அகற்றுதல் போன்ற பலவேறுபட்ட செயல்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம் என்றும் தவிசாளர் குறிப்பிட்டார். (எ)

# சாய்ந்தமருது அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டம்

சாய்ந்தமருது, ஓக. 01

அம்பாறை மாவட்டத்தின் சாய்ந்தமருது பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். ஆசிக் ஏற்பாட்டில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவாவின் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. (எ)

# திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் திடீர் தீ பரவல்



ஒலுவில், ஓக. 01

அம்பாறை மாவட்டம் ஒலுவில் அஷ்ரப் நகரில் அமைந்துள்ள திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் நேற்று அதிகாலை திடீரென்று தீ பரவியது.

அக்கரைப்பற்று மாநகர சபை தீயணைப்பு பிரிவின் உதவியோடு தீ கட்டுப்படுத்தப்பட்டது. (எ)

# "பெண் ஊழியரின் கலாசார உடையை அகற்ற சொல்வதை ஏற்க முடியாது"

திருகோணமலை, ஓக. 01

சுகாதாரத்துறையில் பணிபுரியும் முஸ்லிம் பெண் ஊழியர்கள் அணியும் கலாசாரம் சார்ந்த உடைகளை அகற்றுமாறு திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் விடுத்துள்ள உத்தரவு ஏற்றுக் கொள்ள முடியாதது என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் தெரிவித்தார்.

திருகோணமலையில் உள்ள மருத்துவமனைகள் மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகங்களில் கடமையாற்றும் முஸ்லிம் தாதியர்கள், மருத்துவ மாதுக்கள் மற்றும் சிற்றூழியர்கள் இனிமேல் கலாசார உடை அணிந்து கடமைக்கு வரக்கூடாது என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட அலுவலர்கள் எனது கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர்.

தாம் கடமை ஏற்றது முதல் தற்போது ஓய்வூதியம் பெறும் வயதையும் அடைந்துள்ள இது வரையான காலத்தில் எமது சீருடையுடன் கலாசார உடையும் சேர்த்து அணிந்தே கடமைகளை முன்னெடுத்து வருகிறோம். ஆனால், தற்போது நாம் கலாசார உடை அணிந்து கடமைக்கு வரக் கூடாது என்றும் இதை மீறும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. எனவே, இதனைக் கவனத்தில் எடுத்து எமக்கு நியாயம் பெற்றுத் தாருங்கள் என என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இனவாதம் இல்லாத ஆட்சி என மேடைக்கு மேடை கூறிக் கொள்ளும் இந்த அரசாங்க காலத்தில் எந்த ஆட்சியிலும் இல்லாத வகையில் முஸ்லிம் பெண்களின் உடை விடயத்தில் இனவாத போக்கை கையில் எடுத்துள்ள அரச அதிகாரிகளுக்கு எதிராக இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா? அல்லது இந்த உத்தரவின் பின்னால் அரசு தான் உள்ளதா? என்ற சந்தேகம் உருவாகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# தொல்லியல் திணைக்களம் அத்துமீறல் பொறுப்பதிகாரிக்கு அழைப்பாணை

திருகோணமலை, ஓக. 01

திருகோணமலை, குச்சவெளியில் உள்ள காணியில் தொல்லியல் திணைக்களம் அதிகார துஷ்பிரயோகம் செய்வதாக மனித உரிமை ஆணைக்குழுவில் தனியார் ஒருவர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய தொல்லியல் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி உள்ளிட்ட இரு தரப்பினருக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு அழைப்பாணை விடுத்துள்ளது.

குறித்த முறைப்பாடு தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக எதிர்வரும் 07 ஆம் திகதி காலை 10. 00 மணியளவில் திருகோணமலை பிராந்திய மனித உரிமை ஆணைக்குழுவின் காரியாலயத்தில் இது தொடர்பான சகல ஆவணங்களுடனும் முன்னிலையாகுமாறு மனித உரிமை ஆணைக்குழுவால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அழைப்பாணைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# கல்முனை மாநகர சபையில் சேவை நலன் பாராட்டு விழா

கல்முனை, ஓக. 01

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபையில் ஒழுங்கு செய்யப்பட்ட வருடாந்த சேவை நலன் பாராட்டு விழா நேற்று முன்தினம் புதன்கிழமை மாநகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கல்முனை மாநகர சபையின் பிரதி ஆணையாளர் எம். அஸீம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாநகர ஆணையாளர் எம். றாபி பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

இதன்போது கல்முனை மாநகர சபையில் மிகவும் சிறப்பாக கடமையாற்றி, இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களும் ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களுமாக 27 பேர் கௌரவிக்கப்பட்டனர். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்குகூட பாகிஸ்தான் எண்ணெய் விற்பனை செய்யும்

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவிப்பு

வாஷிங்டன், ஒகஸ்ட் 01

**யாருக்குத் தெரியும் இந்தியாவுக்கு கூட ஒரு நாள் பாகிஸ்தான் எண்ணெய்யை விற்பனை செய்யக் கூடும் என்று இந்தியாவை கிண்டலடித்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்.**

இந்தியப் பொருட்களுக்கு 25 சதவீதம் வரி விதிக்கப்படும் என்றும் ட்ரம்ப் அறிவித்துள்ளார். அத்தோடு, பாகிஸ்தானுடனான வர்த்தக ஒப்பந்தம் பற்றிய அறிவிப்பு ஒன்றையும் ட்ரம்ப் வெளியிட்டார்.

அவர் கூறும்பேது, பாகிஸ்தானுடன் நாங்கள் ஒப்பந்தம் ஒன்றை முடிவு செய்துள்ளோம். இதன்படி, பாகிஸ்தானிலுள்ள பெரிய அளவிலான எண்ணெய் இருப்புகளில் இருந்து எண்ணெய் எடுக்கும் பணியை இணைந்து மேற்கொள்ள இருக் கிறோம். இதற்காக எண்ணெய் நிறுவனம் தெரிவு செய்யும் நடை முறையில் ஈடுபட்டு இருக்கிறோம்.

யாருக்கு தெரியும், ஒரு நாள் அவர்கள் இந்தியாவுக்கு கூட எண்ணெய்யை விற்பனை செய்யக் கூடும் என்று கிண்டலாக கூறினார். இந்திய இறக்குமதிப் பொருட்களுக்கு 25 சதவீதம் வரி விதிப்பு மற்றும் கூடுதல் அபராதம் ஆகியவற்றை விதித்து ட்ரம்ப் உத்தரவிட்டார். இது ஒகஸ்ட் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வர இருக்கிறது.

எனினும், வரி குறைப்புக்காக அமெரிக்காவுடன் பல நாடுகள் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார். இதில், இந்தியாவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி, தென்கொரியா (25 சதவீதம் வரி விதிப்பு) வர்த்தக குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளேன் என்றும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார். இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையேயான போரை நானே தடுத்து நிறுத்தினேன் என்று விடாமல் ட்ரம்ப் கூறி வரும் நிலையில், பாகிஸ்தானுடன் அமெரிக்கா கைகோர்த்துள்ளது. (எ)

# "அமெரிக்காவின் மிரட்டலுக்கு பிரதமர் மோடி பயப்படக்கூடாது"

புதுடில்லி, ஒகஸ்ட் 01

அமெரிக்காவின் மிரட்டலுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பயப்படக்கூடாது என்று காங்கிரஸின் மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்தார்.

ஒகஸ்ட் முதலாம் திகதி முதல் இந்தியப் பொருட்களுக்கு 25 சதவீத இறக்குமதி வரி மற்றும் ரஷ்ய எண்ணெய் வாங்குவதற்காக அபராதம் விதிக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் இந்த அறிவிப்பு குறித்து மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை வெளியிட்ட அறிக்கையில், "இந்திய பொருட்களுக்கு அமெரிக்கா விதித்த வரி விதிப்பை கவனத்தில் எடுத்துள்ளோம். இந்த வரி விதிப்பால் ஏற்படும் தாக்கம் குறித்து ஆய்வு செய்து வருகிறோம். இங்கிலாந்துடன் மேற்கொள்ளப்பட்ட வர்த்தக ஒப்பந்தங்களை போன்று. இந்த விவகாரத்திலும் இந்தியாவின் தேசிய நலன்களை பாதுகாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு எடுக்கும்" என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இந்தியா மீது 25 சதவீதம் வரி விதித்ததை "நாட்டுக்கு ஒரு பின்னடைவு" என்று ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி பயப்படக் கூடாது. இது அமெரிக்காவின் மிரட்டல். இது நமக்கு ஒரு பிரச்னையின் காலம். இது நமது பொறியியல், மருந்து மற்றும் வணிகத் தொழில்களைப் பாதிக்கும். இது நமக்கு முன் ஒரு பெரிய சவால். நமக்கு முன் இரண்டு பெரிய சவால்கள் இருப்பதாக நாங்கள் நினைத்தோம் - பாகிஸ்தான் மற்றும் சீனா, ஆனால் அமெரிக்கா மூன்றாவது பெரிய பிரச்னையாக உருவெடுத்துள்ளது"- என்றார். (எ)

# இந்தியப் பொருட்களுக்கு 25, பிரேசிலுக்கு 50 சதவீதம் வரி

## அமெரிக்கா அறிவிப்பு

வாஷிங்டன், ஒகஸ்ட் 01

பிரேசிலுக்கு 50 சதவீதம் வரி விதித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்றதில் இருந்து பல உத்தரவுகளை பிறப்பித்து வருகிறார். சட்டவிரோத குடியேறிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை ட்ரம்ப் எடுத்துள்ளார்.

அமெரிக்காவின் பொற்காலம் மீட்கப்படும் வகையிலான நடவடிக்கையை எடுப்பேன் என தெரிவித்த அவர், சீனா உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கு எதிராக கடுமையான வரி விதிப்புகளை அமுல்படுத்தி உத்தரவிட்டார்.

இந்த நிலையில், பிரேசிலுக்கு மொத்தம் 50 சதவீதம் வரி விதிப்பதற்கான உத்தரவில் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.

அந்த உத்தரவில், பிரேசில் அரசின் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள், அமெரிக்க வர்த்தகத்தில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தியது. அமெரிக்க குடிமக்களின் சுதந்திர பேச்சுரிமையையும் அது பாதித்துள்ளது. அமெரிக்க வெளிவிவகார கொள்கை மற்றும் பொருளாதார நலன்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பிரேசிலுக்கு எதிராக கூடுதலாக 40 சதவீதம் வரி விதிக்கப்படுகிறது. இதனால், பிரேசிலுக்கு ஏற்கனவே விதித்த 10 சதவீத வரியுடன் சேர்த்து, மொத்தம் 50 சதவீதம் வரி விதிக்கப்படுகிறது. எனினும், விமான பாகங்கள், அலுமினியம், உரம் உள்ளிட்ட சில பொருட்களுக்கு விலக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன. ட்ரம்ப் நேற்று முன்தினம் இதற்கான உத்தரவில் கையெழுத்திட்ட நிலையில் 7 நாட்களில் நடைமுறைக்கு வரும் எனக் கூறப்படுகிறது.

இதேபோன்று, இந்தியப் பொருட்களுக்கு 25 சதவீதம் வரி விதிக்கப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார். அமெரிக்க பொருட்களுக்கான இந்தியாவின் வரிகள் மிக அதிக அளவில் உள்ளன. அது உலகிலேயே மிக அதிக வரிவிதிப்பாகவும் உள்ளது. எனவே ஒகஸ்ட் முதலாம் திகதி (இன்று) முதல் இந்தியா 25 சதவீத வரியை செலுத்தும் என அவர் தெரிவித்துள்ளார். (எ)

# விண்ணில் ஏவி 14 வினாடிகளில் வெடித்துச் சிதறியது ரொக்கெட்

கான்பெரா, ஒகஸ்ட் 01


அவுஸ்திரேலியாவில் முதல் முறையாக விண்ணில் செலுத்தப்பட்ட ரொக்கெட் சில வினாடிகளிலேயே வெடித்துச் சிதறியது.

அவுஸ்திரேலியாவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமாக கில்மர் நிறுவனம் செயல்படுகிறது. குயின்ஸ்லாந்து மாகாணம் யாடலா நகரை மையமாக கொண்டு செயல்படும் இந்த தனியார் நிறுவனம் அரசின் நிதியுதவிகளை பெற்று வருகிறது. இந்த நிலையில் நாட்டிலேயே முதல் முறையாக ரொக்கெட் ஒன்றை தயாரித்து விண்ணில் செலுத்த கில்மர் நிறுவனம் முடிவு செய்தது.

இதன்படி "எரிஸ்" என்ற ரொக்கெட்டை தயாரித்தது. இது நேற்று முன்தினம் விண்ணில் ஏவப்பட்டது. கில்மர் நிறுவனத்துக்கு சொந்தமான ஏவுதளத்திலிருந்து இந்த ரொக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டது. கரும்புகையை கக்கியபடி விண்ணில் சீறிப்பாய்ந்த இந்த ரொக்கெட் 14 நொடிகளில் வெடித்து சிதறியது. இது தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு மீண்டு வருவோம் என அந்த நிறுவனம் விளக்கம் அளித்துள்ளது. (எ)

# உக்ரைன் சிறை மீது ரஷ்யா சரமாரி ஏவுகணை தாக்குதல்

## பலி எண்ணிக்கை 22 ஆக உயர்வு



கீவ், ஒகஸ்ட் 01

உக்ரைன் சிறை மீது ரஷ்யா இராணுவம் ஏவுகணை வீசி சரமாரி தாக்குதல் நடத்தியுள்ளது.

ஐரோப்பிய இராணுவ கூட்டமைப்பான "நேட்டோ"வில் இணைய உக்ரைன் ஆர்வம் காட்டியது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உக்ரைன் மீது போர் தொடங்கி தாக்குதல் நடத்தி வருகிறார். இந்தப் போரில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் நிதியுதவி மற்றும் ஆயுதங்கள் வழங்கி வருகின்றன.

ரஷ்யாவுக்கு வடகொரியா உதவுகிறது. சீனா மறைமுகமாக உதவுவதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது. இந்தப் போரில் பல்லாயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர். போரை உடனடியாக கைவிட அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உள்ளிட்ட உலக அரசியல் தலைவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். ஆனால் 3 ஆண்டுகளாக தாக்குதல் தொடர்கிறது.

இந்த நிலையில் ரஷ்ய இராணுவத்தினர் உக்ரைனை குறிவைத்து நேற்று முன்தினம் நள்ளிரவில் திடீர் தாக்குதல் நடத்தினர். தென்கிழக்கு சபோரிஜியா பகுதியில் உள்ள சிறைச்சாலையை குறிவைத்து இஸ்கந்தர் ஏவுகணைகளை வீசியும் ஆளில்லா விமானங்களை பறக்கவிட்டும் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் சிறைச்சாலை கட்டடம் சிதைந்தது. இந்த கோரத் தாக்குதலில் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த 17 கைதிகள் கொல்லப்பட்டதாக முதற்கட்ட தகவல் வெளியாகியிருந்தநிலையில், தற்போது பலி எண்ணிக்கை 22 ஆக அதிகரித்தது. 100இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். சிறைச்சாலையிலிருந்து பலர் தாக்குதலை பயன்படுத்தி தப்பியோடினர்.

முன்னதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதலை உடனடியாக நிறுத்த கெடு விதித்துள்ளார். இதுதொடர்பில் சமூக வலைத்தளத்தில் அவர் வெளியிட்டிருந்த பதிவில், "இனி காத்திருப்பதில் பலனில்லை. புடினின் நடத்தையில் எனக்கு துளியும் விருப்பம் இல்லை. ரஷ்ய மக்களை நான் நேசிக்கிறேன். ஆனால், புடினுடன் போர் நிறுத்த பேச்சுவார்த்தையில் ஈடுபட நான் தயாராக இல்லை" என்றார்.

மேலும் அவர், "அடுத்த 12 நாட்களுக்குள் உக்ரைன் மீதான தாக்குதலை ரஷ்யா முழுமையாக கைவிட வேண்டும். இல்லையெனில் ரஷ்யா மீது பயங்கர வரிவிதிப்பு விதிக்கப்படும்" என்றார். முன்னதாக கடந்த 14ஆம் திகதி அடுத்த 50 நாட்களுக்குள் ரஷ்யா தாக்குதலை நிறுத்தாவிட்டால் பயங்கரவிளைவுகளை சந்திக்க நேரிடும் என தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# பாகிஸ்தான் எல்லை தாண்டிய பயங்கரவாதம்- ஐ.நா. அறிக்கை

நியூயோர்க், ஒகஸ்ட் 01

பாகிஸ்தானின் எல்லை தாண்டிய பயங்கரவாதம் மற்றும் பஹல்காம் தாக்குதல் குறித்து ஐ. நா. அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஐ. நா. பாதுகாப்பு சபையில் வெளியிட்ட அறிக்கையில் தாக்குதல் நடத்திய பயங்கரவாத அமைப்பின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22 ஆம் திகதி நடந்த பயங்கரவாத தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். உலகையே அதிர்ச்சியில் ஆழ்த்திய இந்த தாக்குதல் குறித்து ஐ.நா. பாதுகாப்பு சபையில் விவாதிக்கப்பட்டது. பின்னர் இது தொடர்பில் பாதுகாப்பு சபையின் கண்காணிப்புக்குழு அறிக்கை வெளியிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட்:


# 149 ஓட்டங்களுக்குள் சுருண்டது சிம்பாவே

புலவாயோ, ஓக. 01

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் சிம்பாவே அணி 149 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

சிம்பாவேக்கு சென்றுள்ள நியூசிலாந்து கிரிக்கெட் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதன் முதலாவது டெஸ்ட் போட்டி புலவாயோவில் நேற்று முன்தினம் தொடங்கியது. முதலில் துடுப்பாட்டம் செய்த சிம்பாவே, நியூசிலாந்தின் வேகப்பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் முதல் இன்னிங்ஸில் 60. 3 ஓவர்களில் 149 ஓட்டங்களுக்கு சுருண்டது. அதிகபட்சமாக அணித் தலைவர் கிரேக் எர்வின் 39 ஓட்டங்கள் எடுத்தார். நியூசிலாந்து தரப்பில் வேகப்பந்து வீச்சாளர்கள் மேட் ஹென்றி 6 விக்கெட்களும் நாதன் சுமித் 3 விக்கெட்களும் வீழ்த்தினர்.

பின்னர் தனது முதல் இன்னிங்ஸை ஆடிய நியூசிலாந்து அணி ஆட்ட நேர முடிவில் 26 ஓவர்களில் விக்கெட்கள் இழப்பின்றி 92 ஓட்டங்கள் எடுத்துள்ளது. வில் யங் (41



ஓட்டங்கள்), டெவான் கொன்வே (51 ஓட்டங்கள்) ஆகியோர் ஆட்டமிழக்காமல் உள்ளனர். (எ)



# ஆடுகளத்தை பார்வையிட எல்லா உரிமையும் உண்டு

## கம்பீருக்கு கில் ஆதரவு

லண்டன், ஓக. 01

ஆடுகளத்தை பார்வையிட பயிற்சியாளருக்கு எல்லா உரிமையும் உண்டு என்று கம்பீருக்கு சுப்மன் கில் ஆதரவு தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் கௌதம் கம்பீருக்கும், லண்டன் ஓவல் மைதான பராமரிப்பாளர் லீ போர்டிஸுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. ஆடுகளத்தை 2. 5 மீற்றர் தூரம் தள்ளி நின்று மட்டுமே பார்வையிட வேண்டும் என அவர் விதித்த கட்டுப்பாடு மற்றும் இந்திய வீரர்களின் பயிற்சி செய்த விதத்தை குறை கூறியதால் கடுப்பான கம்பீர், "நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் சொல்ல தேவையில்லை. உங்களது வேலையை மட்டும் பாருங்கள்" என்று சாடினார்.

இந்த விவகாரம் குறித்து இந்திய அணித் தலைவர் சுப்மன் கில்லிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த கில், "ஆடுகளத்தை பார்வையிடுவதற்கு பயிற்சியாளருக்கு எல்லா உரிமையும் உண்டு. ஆனால் ஆடுகள பராமரிப்பாளர் ஏன் அருகில் சென்று பார்க்க அனுமதிக்கவில்லை என்று புரியவில்லை. அவரது செயல் தேவையற்ற ஒன்றாகும். முந்தைய 4 டெஸ்களில் இது போன்ற பிரச்னை எதுவும் வரவில்லை" -என்றார். (எ)

ரி - 20 போட்டி தரவரிசை

# இந்திய வீரர் அபிஷேக் சர்மா முதலிடத்துக்கு முன்னேற்றம்

டுபாய், ஓக. 01

ரி - 20 போட்டி தரவரிசையில் இந்திய வீரர் அபிஷேக் ஷர்மா முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி.) ரி - 20 கிரிக்கெட் வீரர்களின் புதிய தரவரிசை பட்டியலை வெளியிட்டது. இதில் துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசையில் ஓராண்டுக்கு மேலாக அவுஸ்திரேலியாவின் டிராவிஸ் ஹெட் முதலிடத்தில் இருந்தார். சமீபத்தில் மேற்கு இந்திய தீவுகளுக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் ஆடாததால் அதற்குரிய புள்ளிகளை இழந்த டிராவிஸ் ஹெட் 2ஆவது இடத்துக்கு (814 புள்ளி) இறங்கியுள்ளார்.

இதனால் 2ஆவது இடத்தில் இருந்த இந்தியாவின் அபிஷேக் ஷர்மா (829 புள்ளி) முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார். விராட் கோலி, சூர்யகுமாருக்கு பிறகு ரி - 20 கிரிக்கெட்டில் முதலிடத்துக்கு முன்னேறிய 3ஆவது இந்தியர் அபிஷேக் ஷர்மா ஆவார். மற்றொரு இந்திய வீரர் திலக் வர்மா 3ஆவது இடத்தில் (804 புள்ளி) உள்ளார். பந்து வீச்சாளர் தரவரிசையில் முதல் 3 இடங்களில் ஜேக்கப் டப்பி (நியூசிலாந்து), ஆதில் ரஷித் (இங்கிலாந்து), வருண் சக்கரவர்த்தி (இந்தியா) ஆகியோர் உள்ளனர். (எ)

# கனடா ஓபின் ரென்னிஸ்: அலெக்சாண்டர் வெற்றி


றொரண்டோ, ஓக. 01

கனடா ஓபின் ரென்னிஸ் தொடரில் வெற்றி பெற்ற அலெக்சாண்டர் ஸ்வேரெவ் 3ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள கனடா ஓபின் சர்வதேச ரென்னிஸ் போட்டி அங்குள்ள றொரண்டோ நகரில் நடைபெற்று வருகிறது.

இந்தத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் ஜேர்மனியின் முன்னணி வீரரான அலெக்சாண்டர் ஸ்வேரெவ் அவுஸ்திரேலியாவின் அடம் வால்டன் உடன் மோதினார்.

தொடக்கம் முதலே பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் அனுபவம் வாய்ந்த அலெக்சாண்டர் ஸ்வேரெவ் 7-6 (8-6), 6-4 என்ற புள்ளிக்கணக்கில் வெற்றி பெற்று 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)



# இந்தியாவுடனான டெஸ்ட்: பென் ஸ்டோக்ஸ் விலகல்



ஓவல், ஓக. 01

இந்தியாவுக்கு எதிரான 5ஆவது டெஸ்ட் போட்டியிலிருந்து இங்கிலாந்து அணித் தலைவர் பென் ஸ்டோக்ஸ் விலகியுள்ளார்.

இந்தியா - இங்கிலாந்து இடையேயான 5ஆவது டெஸ்ட் போட்டி நேற்றுத் தொடங்கியது. 5 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் இங்கிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. 5ஆவது டெஸ்டில் வென்றால் மட்டுமே தொடரை சமன் செய்ய முடியும் என்பதால் இந்தப் போட்டியில் வென்று தொடரை சமன் செய்யும் முனைப்பில் இந்தியா தீவிரமாக உள்ளது.

இதேவேளையில், போட்டியை சமன் செய்தாலே தொடரை வெல்ல முடியும் என்பதால் இங்கிலாந்து அணியும் வெற்றி முனைப்பில் உள்ளது. இந்த நிலையில், இங்கிலாந்து அணிக்கு பெரிய பின்னடைவாக இந்த டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணியின் தலைவர் பென் ஸ்டோக்ஸ் விளையாட மாட்டார் என்று இங்கிலாந்து அணி நிர்வாகம் அறிவித்துள்ளது.

தோள்பட்டையில் ஏற்பட்ட காயம் காரணமாக பென் ஸ்டோக்ஸ் விளையாட மாட்டார் எனவும் அவருக்கு பதிலாக ஓல்லி போப் அணியை வழிநடத்துவார் என்றும் இங்கிலாந்து அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது. இது தவிர இந்த போட்டியில் பங்கேற்கும் அணிக்குழாமில் மேலும் 3 மாற்றங்களை இங்கிலாந்து அணி செயதுள்ளது.

ஜோப்ரா ஆர்ச்சர், லியாம் டாசன் மற்றும் பிரைடன் கார்ஸ் ஆகியோர் விளையாட மாட்டார்கள் எனவும் அவர்களுக்கு பதிலாக கஸ் அட்கின்சன், ஜேக்கப் பெத்தேல், ஜேமி ஓவர்டன் மற்றும் ஜோஷ் டோங்கு ஆகியோர் அணியில் இடம் பெறுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

லெஜண்ட்ஸ் லீக் கிரிக்கெட்:

# விளையாட மறுத்த இந்தியா இறுதிக்குள் பாகிஸ்தான்

பர்மிங்காம், ஓக. 01

லெஜண்ட்ஸ் லீக் கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தான் அணி இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றது.

2ஆவது உலக சம்பியன்ஸ் ஒப் லெஜண்ட்ஸ் லீக் கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. இதன் லீக் சுற்று போட்டிகள் நிறைவடைந்த நிலையில், இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் அரையிறுதிக்குத் தகுதிபெற்றன.

இதன்படி, முதலாவது அரையிறுதி ஆட்டம் இந்தியா - பாகிஸ்தான் இடையே நேற்று நடைபெறுவதாக இருந்தது. ஆனால், பஹல்காம் தாக்குதல் காரணமாக, பாகிஸ்தானுக்கு எதிரான அரையிறுதி போட்டியில் விளையாட இந்திய சம்பியன்ஸ் அணி மறுப்பு தெரிவித்தது. இதன் காரணமாக போட்டி இரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், பாகிஸ்தான் அணி விளையாடாமலேயே இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெப்ப...

வடக்கு, வட மத்திய, கிழக்கு மாகாணங்கள், மொனராகலை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் மனித உடலால் உணரப்படும் வெப்பநிலை "அவதானம்", "எச்சரிக்கை" மட்டத்தில் நிலவுகின்றமையே இதற்கு காரணம் என்றும் மருத்துவ நிபுணர் தெரிவித்தார். (ஐ)

## பரந்தன்...

டிப்பர் வாகனம் முந்திச் செல்ல முற்பட்டது. இதன்போதே மோட்டார் சைக்களை மோதி டிப்பர் வாகனம் விபத்தை ஏற்படுத்தியதாக பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்தது.

விபத்தையடுத்து, டிப்பர் சாரதி பொதுமக்களால் தாக்கப்பட்டார். இதனால், மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது. எனினும், சிறிது நேரத்தின் பின்னர் நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

விபத்துத் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## சூத்திரதாரிகளை...

தொடுத்த வில்லர்கள் இன்னும் கைதாகவில்லை. எனவே, இந்த விடயத்தில் நாசகார வேலைகளின் சூத்திரதாரிகள் கைது செய்யப்பட்டு நீதியின் முன்பாக நிறுத்தப்பட்டு முறையான விசாரணை நடத்தப்பட்டால் அது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை அளிப்பதற்கு உதவும்.

மாறாக, வேட்டையாடிகளை மாத்திரம் கைது செய்வதால் நீதி கிடைக்கப் போவதில்லை. 1956 இல் இருந்து 2015 வரை இன அழிப்பில் ஈடுபட்ட வேட்டைக்காரர்களோ வேட்டையாடிகளோ இதுவரை தண்டிக்கப்படாத குற்றவாளிகளாக இருந்து வருகின்றனர். இவர்கள் அதியுச்ச பதவிகளையும் வகித்து வந்துள்ளனர். இவைதான் இந்த நாட்டின் சாபக்கேடாக உள்ளது. இதனால், குற்றவாளிகளின் ஆளுகையால் நாடு குட்டிச்சுவராகியுள்ளது. ஊழல் மோசடிகள், கொள்ளை, கொலை தாண்டவமாடியதால் நாடு நாசமாக்கப்பட்டுள்ளது.

மிகப்பெரும் குற்றச் செயல்களுக்கான பெரிய பெருந்தலைகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தகுதி தராதரம் பார்க்காமல் தண்டிக்கப்பட வேண்டும். பல்லாயிரக்கணக்கான மனிதப் படுகொலைகளுக்கு காரணமாக இருந்த பெருந்தலைகள் மறைக்கப்படும் வரை இந்த நாடு உருப்பட வாய்ப்பில்லை.

குற்றச்செயல்களுக்கான சூழலை உருவாக்குதல், குற்றங்களை செய்ய வாய்ப்பளித்தல், குற்றவாளிகளை பாதுகாத்தல், குற்றவாளிகள் பொறுப்பு மிக்க பதவிகளை வகித்தல் என்பன நடைபெறுவதால் இந்த நாட்டில் தீர்வுக்கான உள்நாட்டுப் பொறிமுறை உருக்குலைந்து போயுள்ளது. இதற்கு பல உதாரணங்கள் உள்ளன.

வெலிக்கடை படுகொலைக்குத் தலைமை தாங்கினார் என்று கூறப்படும் விமானக் கடத்தலில் ஈடுபட்ட சிங்களக் கைதி, மிருசுவில் படுகொலையாளியும் மரண தண்டனை குற்றவாளியுமான சுனில் ரத்நாயக்க ஆகியோர் ஜனாதிபதிகளின் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டமை பெரும் குற்றவாளிகளை இனவாத ரீதியில் பாதுகாக்கும் செயல்களாக அமைந்தன.

எனவே, மனிதக் கடத்தல் காணாமல் ஆக்குதல், படுகொலைகள், வதைகள், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் போன்ற பெரும் குற்றங்களுக்குக் கால்கோளிட்ட சூத்திரதாரிகள் வெளிச்சப்படுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும். அம்புகள், வேட்டையாடிகளை மாத்திரம் தண்டிப்பதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியோ, பரிகாரமோ கிடைக்காது. மனிதமும் நீதியும் செத்தால் ஜனநாயகம் பிணநாயகம் ஆகிவிடும் - என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## முதலீட்டுக்கு...

பிறகு, வலுவான பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் சர்வதேச ஆதரவு மூலம் இலங்கை பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைந்துள்ளது. தற்போது இலங்கையில் முதலீட்டுக்கு உகந்த சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

அதிக பணவீக்கம் போன்ற பொருளாதார சவால்கள் தற்போது வெற்றி கொள்ளப்பட்டுள்ளன. அந்நியச் செலாவணி கையிருப்பு வலுப்பெற்றுள்ளது. 2025ஆம் ஆண்டில் 5 சதவீத பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை தற்போது தெளிவான மற்றும் நிலைபேறான பொருளாதாரப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. 2024 பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு, மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் கூடிய அரசாங்கம் அமைந்துள்ளது. இதனால், நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை நிலைநாட்டப்பட்டுள்ளது. "வளமான நாடு - அழகான வாழ்க்கை" என்ற தேசிய தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப, ஊழல் மற்றும் முறைகேடுகள் இல்லாத ஒரு சமூகமும் சிறந்த ஆட்சியும் கட்டியெழுப்பப்பட்டு வருகிறது - என்றும் ஜனாதிபதி இதன்போது கூறினார். (ஐ)

## வடக்கு...

அகியோ இசொமதா கையொப்பமிட்டார்.

இந்த ஒப்பந்தத்தின் பலனாக டெல்வோன் சமூக நல்லிணக்கத்துக்கான உதவி நிறுவனத்தின் கண்ணிவெடி அகற்றும் பணி மேலும் 9 மாதங்களுக்கு எதிர்வரும் 2026 ஏப்ரல் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், புதிய திட்டத்தின் மூலமாக ஒரு இலட்சம் சதுர மீற்றருக்கும் அதிகமான நிலப் பரப்பில் வெடிபொருட்கள் அகற்றப்படும் என்றும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பயனடைவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 2002ஆம் ஆண்டு முதல் நாட்டில் கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு ஜப்பான் அரசாங்கம் ஆதரவளித்து வருகிறது. இதுவரை, இந்தப் பணிக்காக சுமாராக 4.8 கோடி டொலர்களை ஜப்பான் அரசாங்கம் நன்கொடையாக வழங்கியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## திருக்கோயிலில்...

இனியபாரதியின் சகாக்களில் ஒருவர் என்று கூறப்படும் யூட் என்று அறியப்படும் அனோசியஸ் சுரேஷ்கண்ணா வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே திருக்கோவில் மயானத்தில் அகழ்வு பணி நேற்று முன்னெடுக்கப்பட்டது.

அக்கரைப்பற்று நீதிவான் ஏ. சி. றிஸ்வான் மேற்பார்வையில் ஜே.சி.பி. இயந்திரம் மூலம் அடையாளம் காணப்பட்ட பல இடங்கள் தோண்டப்பட்டன. எனினும், எவையும் கிடைக்காத நிலையில் இந்தப் பணி நேற்று மாலை நிறைவுக்கு வந்தது.

இதன்போது, வாக்குமூலம் வழங்கிய கைதியான யூட்டும் கைவிலங்கிடப்பட்டு சம்பவ இடத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்தார்.

கைதியாக உள்ள யூட், இனியபாரதியின் சகாக்களில் ஒருவராவார். இவர், தனது தாயாரை கொன்ற வழக்கில் கைது செய்யப்பட்டு சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார். மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்தவரான அவர் திருக்கோவிலில் தொலைத்தொடர்பு சிம் அட்டை விற்பனை முகவரான அருளானந்தன் சீலன் என்பவர் படுகொலை செய்யப்பட்டு திருக்கோவில் பொது மயானத்தில் புதைக்கப்பட்டார் என்று பொலிஸாருக்கு தெரிவித்து அரச தரப்பு சாட்சியாக மாறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புதிதாக எந்த வரியையும் அறவிட எதிர்பார்க்கவில்லை

## அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 01

புதிதாக எந்தவொரு வரியையும் அறவிட எதிர்பார்க்கவில்லை. அதற்கான தேவையும் அரசாங்கத்துக்கு இல்லை - என்று பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அமெரிக்காவுடனான பேச்சுகளில் இறுதி தீர்மானமாகவே 44 சதவீதமாக காணப்பட்ட தீர்வை வரி 30 சதவீதம் வரை குறைக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட பேச்சுகளின் பிரதிபலனாகவே இந்த வரிக்குறைப்பை மேற்கொள்ள முடிந்தது. எவ்வாறிருப்பினும், அந்த பேச்சுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. முதலாம் திகதி (இன்று) பேச்சுகளுக்கான பதிலும் கிடைக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. சாதகமான பதில் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம்.

உலகளாவிய சந்தை நிலவரங்களில் இவ்வாறான தீர்வை வரிகள் ஏற்றுமதிகளில் தாக்கம் செலுத்தும் ஏனைய சந்தை நிலவரங்களை அடிப்படையாகக் கொண்டே அமெரிக்காவிலிருந்து எரிபொருள் இறக்குமதி செய்வதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. எனவே, கூடிய விலைக்கு அமெரிக்காவிடமிருந்து எரிபொருள் கொள்வனவு செய்யப்படுவதாக நினைக்கவேண்டியதில்லை.

ஒக்ரோபர் முதலாம் திகதியிலிருந்து டிஜிற்றல் சேவைகளுக்கு 18 சதவீத வரி அறவிடப்படவுள்ளதாக கூறப்படுகிறது. அது முற்றிலும் தவறான தகவல். வரவு - செலவு திட்டத்துக்கு அமைய ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து அறவிடப்பட வேண்டிய அந்த வரி ஒக்ரோபர் முதலாம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டு அதனை எவ்வாறு அறவிடுவது என்பதற்கான வர்த்தமானி அறிவித்தலே வெளியிடப்பட்டுள்ளது.

இது சமூகத்தில் தவறாக திரிபுபடுத்தப்பட்டுள்ளது. மக்களுக்கு மிகக் குறைந்த அளவிலான சுமையை ஏற்படுத்தும் வகையிலேயே அரசாங்கம் தீர்மானங்களை எடுத்து நடைமுறைப்படுத்தி வருகிறது. புதிதாக எந்த வகையிலும் வரியை அறிமுகப்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கவில்லை. எவ்வாறிருப்பினும் அரசாங்கத்தை நிர்வகித்து செல்வதற்கு ஏதேனும் ஒரு வகையில் வருமானத்தை ஈட்ட வேண்டும். அதற்கமையவே மக்களுக்கு சுமை அற்ற வகையில் கொள்கையை நாம் பின்பற்றுகின்றோம். புதிதாக எந்தவொரு வரியையும் அறவிட எதிர்பார்க்கவில்லை. அதற்கான தேவையும் அரசாங்கத்துக்கு இல்லை - என்றார்.

# 300 பொலிஸ் அதிகாரிகள் 6 மாதங்களில் இடைநீக்கம்

## பொது பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, ஓக. 01

கடந்த ஆறு மாதங்களில் மட்டும் 300 பொலிஸ் அதிகாரிகள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால கூறுகிறார்.

ஓர் அரசாங்கமாக, அவர்களின் பதவியைப் பொருட்படுத்தாமல் யாருக்கும் எதிராக சட்டம் அமல்படுத்தப்படும்.

பொது சேவையில் உள்ள சிறிய எண்ணிக்கையிலான மக்கள் செய்யும் தவறுகளால் முழு பொது சேவையும் களங்கப்படுத்தப்படுகிறது - என்றும் அவர் கூறினார். (ஐ)

# வெற்றிலை மென்று பொது இடங்களில் துப்பியவர்களுக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, ஓக. 01

குருநாகலில் வெற்றிலையை மென்று பொது இடங்களில் துப்பியவர்களுக்கு எதிராக பொது சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதன்படி கடந்த வாரம் குருநாகலில் பேருந்து நிலையத்தில் 07 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் இன்று வெள்ளிக்கிழமை முதலாம் திகதியன்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (அ)

## முன்னாள்...

உத்தரவின் அடிப்படையில் இந்த சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த சட்டமூலம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட நாளில் இருந்து முன்னாள் ஜனாதிபதிகளின் உரிமைகள் இரத்து செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்ட மூலத்தின்படி, முன்னாள் ஜனாதிபதி அல்லது அவரின் மனைவிக்கு வீடு, மாதாந்த கொடுப்பனவு, மாதாந்த பணிமனை கொடுப்பனவு, போக்குவரத்து, பிற வசதிகள் மாதாந்த ஓய்வூதியம் என்பன இரத்துச் செய்யப்படும்.

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட விசேட சலுகைகளை இரத்து செய்யும் வகையில் ஜனாதிபதி உரிமைகள் சட்டத்தை இரத்து செய்வதற்கான சட்டமூலத்துக்கு அமைச்சரவை அண்மையில் அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அரியாலை...

இந்த நிலையில், இந்த ஸ்கான் பரிசோதனையை எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகும். இந்தப் பணி மறுநாள் திங்கட்கிழமையும் தொடர்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று சட்டத்தரணி நிரஞ்சன் மேலும் தெரிவித்தார். (ஐ)

## நேற்றும்...

அடையாளம் காணப்பட்டன. இதன்படி, 118 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதேபோன்று, ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட 3 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன. இதனடிப்படையில் 105 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டு நீதிமன்ற கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மறுவாழ்வு முகாமிலுள்ள இலங்கையர் 10 நாட்களுக்குள் வெளியேற வேண்டும்

## இந்திய அதிகாரிகள் அறிவுறுத்தல்

சென்னை, ஓக. 01

தமிழகத்தின் நாமக்கல் மறுவாழ்வு முகாமில் உள்ள 60க்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள், தங்களது நாட்டிலிருந்து 10 நாட்களுக்குள் வெளியேற வேண்டும் அல்லது விசாக்களை புதுப்பிக்க வேண்டும் என்று இந்திய அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

கடந்த வாரம், பரமத்தி வேலூரில் உள்ள பொலிஸ், அவர்களுக்கு இது தொடர்பில் எழுத்துபூர்வ அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது.

இதன்படி முகாமில் உள்ள 62 பேர் பல ஆண்டுகளுக்கு முன்னர் சுற்றுலா விஸாக்களில் தமிழகத்துக்குச் சென்றுள்ளனர்.

அத்துடன் முகாம்களில் ஏலவே தங்கியிருந்த அவர்களின் உறவினர்களுடன் தங்கிவிட்டனர்.

அவர்கள் விஸாக்களை புதுப்பிக்கவோ அல்லது இலங்கைக்குத் திரும்பவோ முயற்சிக்காமல் பதிவின்றி சட்டவிரோமாக முகாமிலேயே தங்கிவிட்டனர்.

இதில் சிலர் இலங்கைக்கு மீண்டும் சென்று முகாமுக்கு திரும்பி வந்துள்ளனர்.

இந்தநிலையில், காஷ்மீர் - பஹல்காம் தாக்குதல்களை அடுத்து சட்டவிரோதமாக நாட்டில் தங்கியுள்ளவர்களை வெளியேற்றும் செயற்பாடுகளுக்கு அமையவே, தற்போதைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முன்னரும் இதுபோன்ற உத்தரவுகள், அதிகாரிகளால் வாய்மொழி மூலம் கூறப்பட்டாலும் கூட, தற்போது இந்த உத்தரவு கடுமையாகக் கடைப்பிடிக்கப்படும் என்று தாம் கருதுவதாக நாமக்கல் மறுவாழ்வு முகாமில் உள்ள இலங்கை ஏதிலிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில் குறித்த ஏதிலிகள், நீண்ட கால விஸாக்களுக்கு விண்ணப்பித்து இங்கு சட்டபூர்வமாகத் தங்கவேண்டும் என்பதே தங்களது விருப்பம் என்று இந்திய அரச அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தியாவில், இலங்கை ஏதிலிகள் தொடர்பான விடயங்களைக் கையாளும் வெளிநாட்டுத் தமிழர்களின் மறுவாழ்வு மற்றும் நலத்துறை ஆணைக்குழுவிடம், தங்களது சொந்த நாட்டுக்குச் செல்ல விரும்பும் இலங்கையர்கள் குறித்த தகவல்கள் இல்லை என்பது தெரியவந்துள்ளது.

அத்துடன் அவ்வாறு மறுவாழ்வு முகாம்களில் உள்ள இலங்கை ஏதிலிகளில், இந்தியக் குடியுரிமையைக் கோரியுள்ளவர்கள் தொடர்பான தகவல்களும் அந்த ஆணைக்குழுவிடம் இல்லை என்று இந்திய ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

(அ)

# தமிழர்களுக்கு எதிரான யுத்த குற்றங்கள் சுயாதீன சர்வதேச விசாரணை அவசியம்

## பிரான்ஸ் எம்.பிக்கள் குழு வேண்டுகோள்

பாரிஸ், ஓக. 01

**இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட யுத்த குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் குறித்து சுயாதீன சர்வதேச விசாரணை அவசியம் என பிரான்ஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

பிரான்ஸின் எல்.எவ்.ஐ மற்றும் என்.எவ்.பி கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் அவர்கள் இவ்வேண்டுகோளை முன்வைத்துள்ளனர்.

நீதி உண்மை மற்றும் இழப்பீட்டுக்கான உரிமையை வலியுறுத்தியுள்ள அவர்கள், தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டது என பல ஆவணங்களை மேற் கோள்காட்டி தெரிவித்துள்ளனர்.

மேலும் தமிழ் மக்கள் நீதியை கோரி நிற்கின்றபோதும், இதுவரை சுயாதீன விசாரணை எதுவும் இடம்பெறவில்லை.

இதன் காரணமாக இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக போர்க் குற்றங்கள் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் இடம்பெற்றது என்பதை பிரான்ஸ் அரசாங்கம் அங்கீகரிக்கவேண்டும்.

பிரான்ஸ் நம்பகதன்மை மிக்க நீதி செயற்பாட்டுக்கு ஆதரவளிக்க வேண்டும்.

செம்மணி மனித புதைகுழிகள் சர்வதேச நீதிமன்றத்தின் முன் சட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் இவற்றுக்கு காரணமானவர்களை பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்துவதற்கும் முக்கியமான வாய்ப்பை வழங்குகின்றன என பிரான்ஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

(அ)

# இலங்கைக்கு கஞ்சாவை கடத்த முயன்றவர் இந்தியாவில் கைது!

சென்னை, ஓக. 01

இலங்கைக்குக் கடத்த சரக்கு வாகனத்தில் தக்காளி பெட்டிகளுக்குப் பின்புறம் கஞ்சாவைப் பதுக்கி வைத்திருந்த ஒருவரைத் தூத்துக்குடி மாவட்டம் வேம்பார் கடற்கரையில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் பகுதியைச் சேர்ந்தவர் பாரவூர்தி சாரதியான நாஞ்சில்ராஜ் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த சில தினங்களுக்கு முன்பு திருச்சியிலிருந்து ஆந்திரா மாநிலத்துக்கு முருங்கைக்காய் உள்ளிட்ட காய்கறிப் பொருட்களை ஏற்றிச் சென்று சரக்குகளை ஆந்திராவில் இறக்கிய பின்பு அவரது சொந்த ஊரான தென்காசி மாவட்டம், ஆலங்குளம் பகுதிக்கு வந்துள்ளார்.

பின்னர் இரு தினங்கள் அங்கு இருந்துவிட்டு, தூத்துக்குடி மாவட்டம் வேம்பார் கடற்கரை நோக்கி வந்துள்ளார்.

அப்போது வேம்பார் கடற்கரை அருகே சந்தேகத்திற்கிடமான வாகனம் நிற்பதைக் கண்ட பொலிஸார் விசாரணையில் அவர் மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

மாவட்ட போதைப் பொருட்கள் கடத்தல் தடுப்பு நுண்ணறிவு பிரிவினர் சம்பவ இடத்துக்கு வந்து வாகனத்தைச் சோதனையிட்டபோது வாகனத்தில் தக்காளி கூடைகளுக்குப் பின்புறம் மூடை மூடையாகக் கஞ்சா இருப்பது தெரியவந்தது.

இதன்போது 50 லட்சம் ரூபாய் இந்திய மதிப்பிலான 240 கிலோ கஞ்சாவை பொலிஸார் மீட்டனர்.

இது தொடர்பாக வாகனச் சாரதியிடம் மேற்கொண்ட விசாரணையின் போது கஞ்சா மூடைகளைப் படகு மூலம் இலங்கைக்குக் கடத்த முயன்றமை தெரியவந்தது.

(அ)

# விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் வாடகைக்கு!

## மூவருக்கு 90 நாட்கள் தடுப்பு காவல்

கொழும்பு, ஓக. 01

போர்க் காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளால் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களை தெற்கின் பாதாள உலக உறுப்பினர்கள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களுக்கு வாடகைக்கு வழங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களை 90 நாட்கள் காவலில் வைக்க கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன அனுமதி வழங்கினார்.

ஜூலை 21 ஆம் திகதி கிரிபத்கொடை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஒரு சந்தேக நபரால் வெளிப்படுத்தப்பட்ட தகவலின் அடிப்படையில், ரி-56 ரக தாக்குதல் துப்பாக்கி, 30 தோட்டாக்களுடன் மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டதாக பயங்கரவாத விசாரணைப் பிரிவு அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

ரி-56 ரக துப்பாக்கியை வவுனியாவிலிருந்து கொழும்பு பகுதிக்கு கொண்டு சென்று, குற்றத்தைச் செய்வற்காக, அதனை மூன்றாம் தரப்பினரிடம் ஒப்படைத்து, பின்னர் அதை வவுனியாவுக்கு திருப்பி அனுப்பும் திட்டங்கள், தமது விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டதாக பயங்கரவாத விசாரணைப் பிரிவு அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

விசாரணையின் போது பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில், வவுனியா குற்றப்பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் குழு, முக்கிய சந்தேக நபருடன் நெருங்கிய தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்களைக் கைது செய்தது.

அவர்கள் செட்டிகுளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நேரியகுளம் பகுதியில் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களின் வீடு மற்றும் தோட்டத்துக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களையும் பொலிஸார் பறிமுதல் செய்ததாக விசாரணையாளர்கள் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இந்தநிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்து ஆயுதங்கள் தெற்கில் குற்றங்களைச் செய்வதற்காக சேமித்து வைக்கப்பட்டிருந்தனவா அல்லது பணத்திற்காக பாதாள உலகக்குழு மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களுக்கு வாடகைக்கு விடப்பட்டதா என்பதைத் தீர்மானிக்க விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக, பொலிஸ் அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

(அ)

# ஏற்றுமதியை அதிகரிக்கவேண்டுமாயின் வடக்கில் தொழிற்சாலைகள் அவசியம்!

## மாகாண ஆளுநர் வேதநாயகன் கருத்து

யாழ்ப்பாணம், ஓக. 01

ஏற்றுமதியை அதிகரிக்காமல், நாட்டின் வருமானத்தை உயர்த்த முடியாது எனவும், ஏற்றுமதியை அதிகரிக்கவேண்டுமானால், வடக்கு மாகாணத்தின் விவசாயம் மற்றும் கடற்றொழில் உற்பத்திப் பொருட்களை, பெறுமதி சேர் உற்பத்திப் பொருட்களாக மாற்றும் தொழிற்சாலைகள் உருவாக்கப்பட வேண்டும் எனவும், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தேசிய ஏற்றுமதியாளர் சங்கம், றோட்டரி -யாழ்ப்பாணத்துடன் இணைந்து வடக்கு மாகாணத்தில் ஏற்றுமதிக்குத் தயாரான உற்பத்தியாளர்களை மேம்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல், நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் அரியாலையில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக பங்கேற்ற ஆளுநர் உரை நிகழ்த்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விவசாய வணிகம் முதல் கடல் வளம் வரை, பாரம்பரிய கைவினைப் பொருட்கள் முதல் தொழில் நுட்ப சேவைகள் வரை, நமது உள்ளூர் தொழில்களின் வலிமையை பயன்படுத்திக் கொள்ளுமாறு, வருகை தரும் அனைத்து ஏற்றுமதியாளர்களையும் முதலீட்டாளர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

உங்கள் வழிகாட்டுதல், நிபுணத்துவம் மற்றும் தொடர்பாடல்கள் மூலம், வடக்கில் ஒரு துடிப்பான ஏற்றுமதி சமூகத்தை உருவாக்க முடியும்.

இந்தச் செயற்பாட்டுக்கு எமது மாகாண சபை முழுமையான ஒத்துழைப்பை வழங்கும்.

தற்போதைய அரசாங்கம் ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கியே கூடுதல் கவனம் செலுத்துகின்றது.

அவ்வாறானதொரு சாதகமான சந்தர்ப்பத்தை நாம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்- என்றார்.

இதன்போது ஏற்றுமதியாளர்களுக்கான நூல் ஒன்றும் ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன், தேசிய ஏற்றுமதியாளர் சங்கத் தலைவர் மற்றும் றோட்டரி கழகத்தின் இலங்கை மற்றும் மாலை தீவுக்கான ஆளுநர் ஆகியோர் பங்கேற்றனர்.

(அ)

# இலங்கை மின்சார சபையை ஐந்தாகப் பிரிப்பதற்கு திட்டம்

## அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 01

பொதுமக்களுக்கான சலுகைகளை அதிகரிக்கும் வகையில் இலங்கை மின்சார சபையை ஐந்து நிறுவனங்களாகப் பிரிக்கும் திட்டம் இருப்பதாக தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் லக்மாலி ஹேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபை தற்போது திறைசேரிக்கு சுமார் 200 பில்லியன் ரூபாய் கடன்பட்டுள்ளதாகவும், அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை மின்சார சபை ஒரே நிறுவனமாக இருப்பது அதன் உற்பத்தித்திறனுக்குத் தீங்கு விளைவிக்கும் என்றும், பொதுமக்களுக்குக் குறைந்த விலையில் மின்சாரம் வழங்க முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.08.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org